கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
416-282-4978
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

தூர்ந்த பணமாற்றும் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 25 பாலம் 14 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 15, 2015

# கனேடிய பொருளாதார நிலை!

கனேடிய பொருளாதார வளர்ச்சி 2015 இல் 2 வீதமாக இருக்கும் என ஏப்பிரல் 2015இல் கனேடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் எதிர்வு கூறப்பட்டது. ஆனால் கனேடிய புள்ளிவிபர திணைக்களத்தின் அறிக்கையின் படி இவ்வருடத்திற்குரிய முதலாவது காலாண்டின் கனேடிய பொருளாதார வளர்ச்சி 0.6 வீதத்தால் சுருங்கியிருந்தது (Shrank).

அமெரிக்க வங்கியின் பொருளாதார நிபுணர் Emanuella Enenajor, கனேடிய பொருளாதார வளர்ச்சி, முதலாவது காலாண்டில் ஏற்பட்ட சுருக்கத்தை தொடர்ந்து ஏப்ரில் 2015 இலும் 0.1 வீதத்தால் சுருங்கியிருக்கிறது. இதனால் கனேடிய பொருளாதாரத்தில் மந்தநிலை (Recession) ஏற்படலாம் எனக் கூறியதாக CBC செய்தி நிறுவனம் 2015 யூலை 03இல் தெரிவித்தது.

கனேடிய பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படலாம் என்ற செய்தியை மறுதலித்து நிதி மந்திரி Joe Oliver ரொறான்ரோவில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். பொருளாதார நிபுணர்கள் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தொடர்ந்து இரண்டு காலாண்டுப்பகுதியில் சுருங்கி வந்தால் அந்நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்து விட்டதாக கூறுவார்கள்.

கனடாவின் முதலாவது காலாண்டுப்பகுதியும், இரண்டாவது காலாண்டுப் பகுதியில் முதலாவது மாதமும் பொருளாதார சுருக்க நிலையில் இருந்தது. இரண்டாவது காலாண்டுப் பகுதியின் மீதமுள்ள இரண்டு மாதங்களுக்கான (மே மற்றும் யூன்) பொருளாதார வளர்ச்சி பற்றிய தகவல்கள் இன்னும் கணிக்கப்பட்டு வெளியிடப்படவில்லை. இந்நிலையில் கனேடிய பொருளாதாரம் மந்தநிலை அடைந்து விட்டதாக கூறுவது தவறு என்று மொன்றியல் வங்கியின் (BMO) பொருளாதார நிபுணரை Doug Porter, CBC செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார். அவர் கனடாவின் பொருளாதாரம் ஒரு சுருக்கமும் அற்ற வளர்ச்சியும் அற்ற நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

ஆனால் Emanuella Enenajor மேலும் தெரிவிக்கையில் கனேடிய டொலரின் பெறுமதி கடந்த 2 வருடங்களில் 22வீத சரிவை அடைந்துள்ளது. இது கனேடிய ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு மிக நல்ல செய்தி. ஆனால் ஏற்றுமதியாளர்களின் பொருட்கள் ஏற்றுமதியில் எதிர்பார்த்த அளவு வளர்ச்சி காணப்படவில்லை. கனடாவில் 54,000 தொழிற்சாலைகள் மட்டும் தான் தற்போது உண்டு. இது கனடாவில் 2008இல் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டபோது இருந்த எண்ணிக்கையின் அளவாகவே தற்போதும் இருக்கின்றது. இத் தொழிற்சாலைகளில் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு காணப்படவில்லை. கனடாவின் பொருளாதார வளர்ச்சியில் தொழிற்சாலைகளின் பங்கு மிக முக்கியமானதொன்று என்று அவர் தெரிவித்தார்.



பிரான்ஸ் இல் தலைமையகத்தை கொண்டு இயங்கும் OECD என்னும் பொருளாதார நிபுணர்களைக் கொண்ட அமைப்பு கனேடிய பொருளாதார வளர்ச்சி 2015இல் 1.5 வீதமாக இருக்கும் என தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மார்ச் 2015இல் கனேடிய பொருளாதார வளர்ச்சி 2015இல் 2.2 வீதமாக இருக்கும் எனக் கூறியிருந்தது.

இதேவேளை கனடாவின் றோயல் வங்கி (RBC) கனேடிய பொருளாதாரம் 2015இல் 1.8% ஆக இருக்கும் எனவும் CIBC வங்கி 1/4% மாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளன.

மேற்கூறிய தரவுகளை காட்டி கனேடிய நிதி அமைச்சர் கனேடிய பொருளாதாரம் 2015 இல் மந்தநிலையை அடையாது எனவும் கனேடிய பொருளாதார வளர்ச்சி 2016இல் அதிகளவாக இருக்கும் எனவும் உறுதியாக தெரிவிக்கிறார். கனேடிய நிதி அமைச்சு இதை உறுதிப்படுத்த 15 தனியார் நிறுவனங்களை சேர்ந்த பொருளாதார நிபுணர்களின் அறிக்கையை மேற்கோள் காட்டியுள்ளதாக CBC செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

DENTAL OFFICE
DENTAL IMPLANT · ROOT CANAL · WISDOM TOOTH EXTRACTION
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
2 LOCATIONS
3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232
3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE The Guardian
SAVE YOUR MONEY SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241


HOMES *COMMERCIAL*INVESTMENTS
Church/Rosland
luxury
4 bm 4 wsrm home
3200 sqft,finished bsmnt
Scarborough
525k
3 bm Finished
W/O bsmnt home
Markham/16 th ave
4 bm 4 wsrm fin bsmnt
2700 sq ft living space
stouffville
4bm 3wm Home
Hwy 12/Hwy 48 East
FARM LAND
98 Acres
5 bm home,Barn (40' X 60')
Drive Shed, Paddocks., Pond
scarborough
luxury
2 bm 2 wsrm condo apt
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION $500/-* GUARANTEED SALE
Century 21 BROKERAGE
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE



நல்லூர் குமரன் பட்டுச் சேலைகளின் சாம்ராஜ்யம்

# NALLUR KUMARAN

## மீண்டும் அதே முகவரியில்

MOVED TO KENNEDY/EGLINTON
2387 EGLINTON AVENUE EAST - 1st FLOOR
SCARBOROUGH, ONT., M1K 2M5
416 285 6797

## GRAND OPENING SALE!

JULY 10, 2015 முதல்

இனிமை நினைவுகள் தொடரட்டுமே

PURE KANCHIPURAM SILK SAREES, COTTON SAREES, SALWAR KAMEEZ NIGHTY'S LADIES TOPS

## SALE SALE SALE

NALLUR KUMARAN
TRADE MARK PURE KANCHIPURAM SILK SAREES






# விளையாட்டுத் தகவல்கள் 366

## மகளிர் உலககிண்ண கால்பந்து போட்டி



அரையிறுதிப்போட்டிகளில் அமெரிக்கா 2 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் ஜேர்மனியை வென்றது. ஜப்பான் 2 - 1 என்ற கோல் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது. மூன்றாம் இடத்திற்கான தெரிவுப்போட்டியில் இங்கிலாந்து 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் ஜேர்மனியை வென்றது. இறுதியாட்டத்தில் அமெரிக்கா 5 - 2 என்ற கோல் வித்தியாசத்தில் ஜப்பானை வென்று ஏழாவது FIFA உலக கிண்ணத்தை கைப்பற்றியது. இதன்மூலம் அமெரிக்கா மூன்றாவது முறையாக இந்த உலககிண்ணத்தை வென்றது.

2011இல் நடைபெற்ற 6ஆவது FIFA உலககிண்ண போட்டி அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையில் ஜேர்மனியில் நடைபெற்றது. அதில் ஜப்பான் 3 - 1 என்ற கோல் வித்தியாசத்தில் (பனால்ரி) வென்று 6ஆவது FIFA உலக கிண்ணத்தை கைப்பற்றியது. எட்டாவது FIFA உலக கிண்ணப்போட்டிகள் 2019இல் பிரான்ஸில் நடைபெறவுள்ளன.

## பான்-ஆம் விளையாட்டுக்களின் பதக்கங்களின் நிலவரம்

| | நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | Canada | 28 | 23 | 17 | 68 |
| 2 | United States | 20 | 21 | 24 | 65 |
| 3 | Cuba | 15 | 11 | 16 | 42 |
| 4 | Colombia | 14 | 7 | 11 | 32 |
| 5 | Brazil | 12 | 9 | 21 | 42 |
| 6 | Mexico | 9 | 7 | 19 | 35 |
| 7 | Argentina | 6 | 12 | 11 | 29 |
| 8 | Chile | 3 | 2 | 4 | 9 |
| 9 | Ecuador | 2 | 7 | 6 | 15 |
| 10 | Peru | 1 | 2 | 2 | 5 |

### முதன் முறையாக பட்டம் வென்று வரலாறு படைத்த சிலி!!!

கோபா அமெரிக்க கால்பந்து போட்டியில் சிலி அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தி முதன் முறையாக பட்டம் வென்றது. 99 ஆண்டுகால கோபா அமெரிக்க கால்பந்து வரலாற்றில் சிலி அணி ஒரு முறை கூட பட்டம் வென்றது கிடையாது. இதுவே சிலி அணிக்கு முதல் பட்டம் ஆகும். அதேசமயம் ஆர்ஜென்டினா அணி இதுவரை 14 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. இருப்பினும் கடைசியாக இப்பட்டத்தை வென்று 22 ஆண்டுகள் ஆகிவிட்டது. கடந்த மாதம் 11ஆம் திகதி சிலி நாட்டில் 44ஆவது கோபா அமெரிக்கா கால்பந்து திருவிழா தொடங்கியது. இதில் முன்னாள் சாம்பியன் பிரேசில், நடப்பு சாம்பியன் உருகுவே அணிகள் காலிறுதியுடன் வெளியேற்றப்பட்டன. அர்ஜென்டினாவும், போட்டியை நடத்தும் சிலியும் இறுதிசுற்றுக்குள் அடியெடுத்து வைத்தன. இந்நிலையில் இவ்விரு அணிகள் இன்று இறுதிப் போட்டியில் மோதின. பரபரப்பான இந்தப் போட்டியில் இறுதிவரை எந்த அணிகளும் கோல் அடிக்கவில்லை.

இதனால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிலும் எந்த அணியும் கோல் அடிக்காததால் பெனால்டி முறையில் வெற்றியை தீர்மானிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த பெனால்டி முறையில் சிலி 4 கோல்கள் அடித்தது. ஆனால் அர்ஜென்டினா 1 கோல் மட்டுமே அடித்தது. இதனால் 4-1 என்ற கணக்கில் சிலி அணி சாம்பியன் பட்டம் வென்றது.



### மாரடோனாவுடன் மெஸ்சியை ஒப்பிடலாமா?

ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் அணித்தலைவரும், நட்சத்திர வீரருமான மெஸ்சியின் ஆட்டம் சிலி அணிக்கெதிரான கோபா அமெரிக்கா தொடரில் செயல்பட வில்லை. இதனால் கோபா அமெரிக்கா கிண்ணத்தை தவறவிட்டது ஆர்ஜென்டினா அணி. பார்சிலோனா கிளப் அணிக்காக அசத்தும் இவர் சர்வதேச போட்டிகளில் சரியாக விளையாடுவதில்லை என்று கூறப்படுகிறது. கடந்த 1986இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் தனிநபராக அசத்திய ஜாம்பவான் மாரடோனா, அர்ஜென்டினாவுக்கு சாம்பியன் பட்டம் பெற்றுத் தந்தார். இவரோடு ஒப்பிட்டு பேசப்படும் மெஸ்சி, கடந்த உலகக் கிண்ண இறுதிச்சுற்றில் ஜேர்மனியிடம் தோற்று வாய்ப்பை வீணாக்கினார். ஆனால் புள்ளி விபரங்களின்படி பார்த்தால் மெஸ்சி பல வழிகளில் மாரடோனாவை மெஸ்சி முந்துகிறார். மாரடோனா 34 போட்டிகளில் 91 கோல் அடித்துள்ளார். ஆனால் மெஸ்சி 46 போட்டிகளில் 103 கோல் அடித்துள்ளார். கிளப் அளவிலும் மாரடோனா 588 போட்டியில் 312 கோலும், மெஸ்சி 482 போட்டியில் 412 கோலும் அடித்துள்ளார். மாரடோனா ஒருமுறை பிபா சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். ஆனால் மெஸ்சி 4 முறை இந்த விருதை வாங்கியுள்ளார். தனிப்பட்ட முறையில் சிறந்த வீரர்தான். ஆனால் மற்ற வீரர்கள் ஒத்துழைக்காததால் தான் கிண்ணம் வெல்ல முடியவில்லை என்று கூறப்படுகிறது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

***WOW! ACT NOW, THIS WON'T LAST*** $529,900



MORRISH / ELLESMERE - OPEN HOUSE SAT/ SUN1-4 PM

Stunning 3 bedroom Detach 2 storey home inin Highland Creek area. Totally renovated top to bottom. New Hardwood and ceramic floors, Gourmet kitchen with new stainless steel Appliances.Oak staircase, gas fireplace new washrooms. Professionally landscaped front and backyard withinterlock patio. Great curb appeal.Close to TTC, school,park, 401, U OF T and Pan Am games.



HomeLife / GTA Realty Inc. Brokerage
Independently owned & operated

For more info Call: RAMA
Sales Representative
416.565.2596

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?
- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமெண்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- வீடு வாங்க வேணும்/ வீடு விற்க வேணும் ?

## மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

BEST RATE GUARANTEED

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent/ Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001426
**Cell : 416-624-4843**

And..

## For All Your Real Estate Services

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கனடாவின் பொருளாதார நிலையைப் பார்த்தால் மசகு எண்ணெய் சம்பந்தப்பட்ட தொழில் வளர்ச்சியில் பொருளாதார மந்தநிலை தெரிவது உண்மை. ஆனால்



உற்பத்திப்பொருட்கள் செய்யும் தொழிலில் பலவீனமான வளர்ச்சியே காணப்படுகிறது. அதேபோல் உள் கட்டுமான தொழில் துறையிலும் பலவீனமான வளர்ச்சியே காணப்படுகிறது என்று 2008 இலிருந்து 2013ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகராக இருந்த Kevin Page, CBC நிறுவனத்திற்கு 2015 யூலை 11இல் அளித்த நேர்காணலில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் பொதுச் சேவை சம்பந்தபட்ட தொழிற்துறையில் பொருளாதார வளர்ச்சி காணப்படுவதாக தெரிவித்தார்.

கனடாவில் 2015ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 63,000உம் இரண்டாவது காலாண்டில் 33,000உம் ஆக இதுவரை 96,000 முழுநேர வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.



அத்துடன் கனடாவின் வேலை இல்லாதோரின் எண்ணிக்கை யூன் மாதம் உட்பட கடந்த 5 மாதங்களாக 6.8 வீதமாகவே மாறாமல் இருக்கிறது.

உதாரணமாக யூன் மாதத்தை மட்டுமே கருத்தில் கொண்டால் இம்மாதத்தில் 64,800 முழுநேர வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் 74,200 பகுதிநேர வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பெரும்பாலான ஊடகங்கள் இவற்றைப் பற்றி ஆராயாமல் யூன் மாதத்தில் 6,400 பேர் வேலையை இழந்தனர் என்கின்றன. அது எண்ணிக்கையில. சரியாக இருந்தாலும் தரத்தில் முழுநேர வேலைகளுடன் பகுதிநேர வேலைகளை ஒப்பிட முடியாது.

கனேடிய நிதி அமைச்சர் Joe Oliver தமது அரசாங்கம் இந்த ஆண்டு கனேடிய பொருளாதாரத்தை முன்னேற்றும் முகமாக 10 பில்லியன் டொலரை முதலீடு செய்வதாக வரவு செலவுத்திட்ட உரையின் போது கூறியதை வன்கூவரில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் 2015 யூலை 7இல் மீண்டும் தெரிவித்திருந்தார். இதில் குறிப்பிடத்தக்க இரண்டு முதலீடுகளானவை குடும்ப நலத் திட்டமும் உள்கட்டுமானத் தொழில் துறையுமாகும்.

கனேடிய வங்கி கடந்த ஜனவரியில் தனது வட்டி வீதத்தை 0.75%மாக குறைத்து பொருளாதார நிபுணர்களுக்கு ஓர் எதிர்பாராத அதிர்ச்சியை கொடுத்தது. அதற்குமுன் செப்ரெம்பர் 2010இல் இருந்து கனேடிய வங்கி தனது வட்டி வீதத்தை 1.00%மாக வைத்திருந்தது. எதிர்வரும் 2015 யூலை 15ஆம் திகதி கனேடிய வங்கி தனது வட்டி வீதத்தை 0.75%மாகவே வைத்திருக்கும் என அரைவாசி பொருளாதார நிபுணர்களும் 0.50%மாக குறைத்து மேலும் கனேடிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என மற்றைய அரைவாசி பொருளாதார நிபுணர்களும் கூறுகின்றனர்.



# நல்லாட்சி தொடருமா? ஓகஸ்ற் மாதம் விடை தெரியும்!

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் அரசியலில் பிரவேசிப்பாரா என்ற கேள்விக்கு விடை இப்போது தெரிந்து விட்டது. மஹிந்த தேர்தலில் களமிறங்குவது உறுதியாகி விட்டது. குருநாகல் மாவட்டத்தில் அவர் இம்முறை போட்டியிடுகின்றார். மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் எனவும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் அவர் பிரதமர் வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்றும் அவரது ஆதரவாளர்கள் அவரை தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். நுகேகொடையில் தொடங்கி, பல கூட்டங்களையும் அவர்கள் நடத்தினர். அந்தக் கூட்டங்களில் மஹிந்த ராஜபக்ஸ கலந்து கொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றதும் சில நாட்கள் மஹிந்த ஓய்வெடுப்பது போன்றே காணப்பட்டார். விகாரைகளுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுவது, அவ்வேளைகளில் ஊடகங்களுக்கு கருத்துக்களை கூறுவது என்றே அவரது சில நாட்கள் இருந்தது. தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர் எவ்வித முடிவுகளையும் கூறாதிருந்தார். அவருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட கூட்டங்களில் நேரடியாக கலந்து கொள்வதையும் தவிர்த்து வந்தார். ஆனாலும் அவற்றை மிக உன்னிப்பாக அவதானிக்கத் தவற வில்லை. அவருக்கு ஆதரவான அக்

**- விகிர்தன் -**

கூட்டங்களில் கணிசமான மக்கள் கலந்து கொண்டமை அவருக்கு உற்சாகத்தை அளித்தது. இந்நிலையில், மக்களின் விருப்பத்திற்கிணங்கவே தான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவ தாக பிரகடனம் செய்து இப்போது களமி- றங்கியுள்ளார். முன்னதாக, மஹிந்தவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலோ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலோ போட்டியிட இடமளிக்கப்பட மாட்டாது என்றே கட்சியில் பலரும் கூறி வந்தனர்.

பல்வேறு சந்தரப்பங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இவ்வாறு கூறி வந்தார். ஆனால், எவ்வாறு இறுதியில் இடமளிக்கப்பட்டது என்பது தான் எல்லோரையும் குழப்பத்திலாழ்த்தியுள்ள கேள்வியாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இரு பிரிவுகள் தோன்றியது. ஒரு பிரிவு மைத்திரிக்கும் மற்றுமொரு பிரிவு மஹிந்தவிற்கும் ஆதர வாக செயற்பட்டது. மஹிந்த தேர்தலில் கட்சியில் இடமளிக்காவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இரண்டாக பிளவடையும் நிலையும் தோன்றியது. இந்த நிலைமையை சமாளிக்க கட்சியின் தலை- வரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன படாத பாடுபட்டார். இத்தருணத்தில், கடந்த வாரங்களில் மஹிந்தவின் ஆதரவு



குழுவினர் பல சந்திப்புக்களை மைத்திரி பால சிறிசேனவுடன் நடத்தி மஹிந்த தேர்தலில் போட்டியிட கட்சியில் வேட்புமனு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

மஹிந்தவிற்கும் மைத்திரிக்கும் இரகசிய சந்திப்பு இடம்பெற்றதாகவும் செய்திகள் கசிந்தன. அவ்வாறான சந்திப்பு இடம்பெற வில்லை என்று மைத்திரி தரப்பு மறுத்து வந்தாலும், சந்திப்பு நடந்தமை பின்னர் உறுதியானது. இவ்வாறான செயற்பாடு களின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மஹிந்த போட்டியிட ஜனாதிபதி மஹிந்த அனுமதி வழங்கிய- தான செய்தியும் வெளிவந்தது. இச்செய்தி யும் முதலில் மறுக்கப்பட்டாலும் இப்போது எல்லாமே உண்மையாகிவிட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயங்களில் நீண்டதொரு மௌனத்தை யே மேற்கொண்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசிய கட்சி யினரும் மற்றும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பி லுள்ள மஹிந்தவிற்கு எதிரானவர்களும் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை குறித்து பலத்த எதிர்ப்புகளை வெளியிட்டனர்.

ஆட்சி மாற்றத்திற்கு காரணமாக செயற் பட்ட முக்கியஸ்தர்களில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க முதலில், மைத்திரி, மஹிந்தவிற்கு கட்சியில் இடமளித்த விவகாரம் தனக்கு தெரியாது என்று கூறினார். பின்னர் நிகழ்வு ஒன்றில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனியாக சந்தித்து இது குறித்து விளக்கம் கேட்டதாகவும் தகவல் கள் வெளியாகின. ஆனால், சந்திரிகா விற்கு மைத்திரி என்ன விளக்கத்தை அளித்தார் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. இந்த தலையிடியில் இருந்து விடுபடுவதற்காக சந்திரிகா உடன- டியாக லண்டன் பறந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் எதுவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் முரண்படவோ, அவரது செயலை விமர்சிக்கவோ கூட இல்லை. ராஜபக்ஸ ஆட்சிக்கு எதிரான கடுமையான போரில் மைத்திரி வெற்றியடைந்துள்ளார். இறுதிப்போரை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிகொள்ளும் என்று அவர் இப்போது தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் நாடு நாசமாகிவிடும். எனவே, எமது குடும்பத்தின் எதிர்காலமா அல்லது மஹிந்த குடும்பத் தின் எதிர்காலமா என்பதனை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் களமி- றங்கவுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவும் எதிர்வரும் தேர்தலையொட்டி கடுமையான பிரச்சார போரை முன்னெடுப்பார் என்றே எதிர்பார்க்கப்படு கின்றது. இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் சில உறுப்பினர்கள் மஹிந்தவிற்கு கட்சியில் இடமளித்ததை கண்டித்து புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். நல்லாட்சிக் கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற இந்த அமைப்பு எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் யானைச் சின்னத்தில் களமிறங்குகின்றது. இதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று கடந்த 12ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்தப் புதிய கூட்டணியில் ஜாதிக ஹெல உறுமயவினர் மற்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் அதிருப்திப் பிரிவினர் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க, ஹிருணிகா பிரேமச் சந்திர, எம்.கே.டி எஸ் குணவர்த்தன, ஹெமால் குணசேகர, சுதர்சினி பெர்னாண்டபுள்ளே, துமிந்த திஸாநாயக்க ஆகியோர் முதலில் இக்கூட்டணியில் இணைந்த நிலையில் பின்னர் மேலும் சிலரும் இணைந்து கொண்டுள்ளனர். இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் கையொப்பமிட்டுள்ளனர். சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, அர்ஜுன ரணதுங்கா, மற்றும் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன ஆகியோர் அலரி மாளிகை யில் வைத்து இதில் கையொப்பம் இட்டுள்ளனர். ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்திலே யே போட்டியிடவுள்ளார். அத்துடன் ஆட்சி மாற்றத்திற்கு பெரிதும் துணைநின்ற மாதுளுவாவே சோபித தேரரும் அவரது சமூக நீதிக்கான அமைப்பு உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்க்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தல் பரபரப்பு நிறைந்ததாகவே இருக்கப்போகின்றது. ரணிலா- மஹிந்தவா? நல்லாட்சியா - குழப்ப ஆட்சியா? என்பதற்கெல்லாம் ஓகஸ்ற் 17ஆம் திகதிக்கு பின்னர் விடை தெரிந்து விடும்.


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# ‘ஜனநாயகப் போராளிகள்’ வெற்றி பெறுவார்களா?

## தாயகமடல்

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் இணைந்து ‘ஜனநாயகப் போராளிகள்’ என்ற பெயரில் கட்சி ஒன்றை உருவாக்கியுள்ளதோடு, அவர்கள் இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலிலும் குதிக்க முன்வந்துள்ளமை யானது அரசியல் களத்தில் இன்று ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஊடகவியலாளர் ந. வித்தியாதரன் தலைமையில், புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளும் அவர்களது ஆதரவாளர்களும் கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடி கலந்துரையாடியதுடன் அன்று மாலையே கட்சியின் பெயர் அறிவிக்கப்பட்டு அக்கட்சியின் நோக்கம், குறிக்கோள் என்பனவும் அறிக்கையாக வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சிரேஷ்ட போராளிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. அன்றைய கலந்துரையாடலில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தேர்தல் மாவட்டங்கள் தோறும் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் தலா இரு முன்னாள் போராளிகளையாவது இணைத்துக்கொள்ளும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையைக் கேட்டுக் கொள்வது என்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆசனப் பங்கீடு தொடர்பாக முடிவு செய்வதற்காக கடந்த 6ஆம் திகதி வவுனியாவில் இரா. சம்பந்தன் தலைமையில் கூடியபோது, அங்கு சென்ற வித்தியாதரன் தலைமையிலான இக்கட்சியின் குழுவினர் முன்னாள் போராளிகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பில் இடமளிக்க வேண்டும் எனவும், இம்முறை நடைபெறவுள்ள



**- ஆதித்தன் -**

நாடாளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் நேரிலேயே கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட்டது. இந்நிலையில், தமிழ் தேசியம் சார்ந்த வேறு கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனநாயக போராளிகள் கட்சியினர் ஆராய்ந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தமது கட்சியில் அவர்களுக்கு இடம் தர தயார் என்று பகிரங்கமாக அறிவித்தார். ஆனால், அதற்கு முன்னாள் போராளிகள் விரும்பவில்லை என்று தெரிகிறது.

இறுதியாக சுயேற்சைக் குழுவாக களமிறங்குவது என அவர்கள் தீர்மானித்துள்ளது டன், இக்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான ந.வித்தியாதரன் வடக்கில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடுவார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை இவ்வாறிருக்க, முன்னாள் போராளிகளைக் கொண்டு, திடீரென ஒரு கட்சி ஆரம்பிக்கப் பட்டுள்ளதும், அதிரடியாக இம்முறை தேர்தல் களத்தில் குதிக்க முன் வந்துள்ளமையும் அரசியல் தளத்தில் பரபரப்பை மட்டுமல்லாமல், கடுமையான விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. சுமார் ஒரு வருடகாலமாக இவ்வாறான தோர் அமைப்பை உருவாக்கும் எண்ணம் ஊடகவியலாளர் வித்தியாதரனுக்கு இருந்து வந்தமை அவருடன் நெருக்கமானவர்களுக்கு தெரியும். கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கு முன்னரே, அதாவது, மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சி காலத்திலேயே அதற்கான நகர்வுகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆட்சியில் இவ்வாறானதோர் அமைப்பை உருவாக்குவதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னர் இது உருப்பெற்றிருக் கலாம் என்றும் கருத முடிகின்றது.

ஆனாலும், முன்னாள் போராளிகள் அதிரடியாக தேர்தலில் குதிக்க முன்வந்துள்ளமையும் அதற்கு ஆசனங்கள் வழங்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்தமையும் சற்று குழப்பமான - சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியது.

வழமையாகவே, தேர்தல்கள் வருகின்ற போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈபிஆர்எல்எவ், தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய கட்சிகளுக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. இப்போது நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான ஆசனப் பகிர்வு தொடர்பிலும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றன.

இந்நிலையில், புதியதோர் கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உடனடியாக இடமளிப்பது என்பது சிக்கலான காரியமாகவே இருந்தது. அது மட்டுமல்லமால், குறித்த ஜனநாயக போராளிகள் கட்சியிலுள்ள முன்னாள் போராளிகள் குறித்த பின்னணிகள் தொடர்பிலும் சந்தேகங்கள் ஏற்படலாம். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

முன்னாள் போராளிகளை கூட்டமைப்பிற்குள் இணைத்துக் கொள்வதென்பது உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தற்போது தாங்கள் மேற்கொண்டு வரும் அரசியல் இராஜதந்திர நகர்வுகளுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும் என சம்பந்தன் கூறுகின்றார்.

எதற்கெடுத்தாலும் ‘புலி புலி’ என்று சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் மஹிந்த ராஜபக்ஸ இத்தேர்தலில் களமிறங்கியுள்ள நிலையில், அவருக்கும், அவரது ஆதரவாளர்களும் இத்தேர்தலில் இதுவொரு பாரிய பிரச்சாரத்திற்கும் வழிவகுக்கும்.

முன்னாள் போராளிகளின் கட்சி எனக் கூறப்பட்டாலும், சுமார் 13 ஆயிரம் வரையிலான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள நிலையில், அவர்கள் அனைவரினதும் பிரதிநிதிகளாக இக்கட்சியிலுள்ளவர்கள் உள்ளனரா என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்புகிறார். பல முன்னாள் போராளிகளே இது பற்றி தன்னிடம் வினவி வருவதாகவும் சுரேஸ் குறிப்பிடுகின்றார்.சில ஊடகங்களும் இப்புதிய கட்சி தொடர்பிலும், அதன் பின்னணிகள் குறித்தும் விமர்சித்து வருகின்றன. மக்களும் இது குறித்த குழப்பமான ஒரு நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இந்நிலையில், நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் அவர்களுக்கு வாக்களித்து ஒரு சிலராவது வெற்றிபெறுவார்களேயானால் முன்னாள் போராளிகளின் இந்த கட்சி அடுத்த கட்டத்திற்கு நகர முடியும். மக்கள் புறக்கணிப்பார்களேயானால், அது முன்னாள் போராளிகளின் கட்சிக்கு மட்டுமன்றி, இன்று சமூகமயப்படத் தொடங்கியிருக்கும் அனைத்து முன்னாள் போராளிகளுக்குமே பாதிப்பாக அமைந்து விடும்.

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விட்டு விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கென்று எவ்வித அமைப்புக்களும் இதுவரை உருவாக்கப்படவில்லை. அவர்கள் பொது சேவைகளில் ஈடுபடுவதும் சிக்கலானதாகவே இருந்தது. எப்போதுமே அவர்கள் புலனாய்வாளர்களின் கண் காணிப்பிலேயே வாழும் நிலை. இப்படியான நிலைமை கடந்த அரசாங்கத்தில் கடுமையாக இருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்தக் கடுமை சற்று குறைவடைந்துள்ளது போல் தோன்றினாலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன. இப்போது முன்னாள் போராளிகள் சிலரும் அவர்களது ஆதரவாளர்களும் ஒருங்கிணைந்து அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கியுள்ள நிலைமையில் எதிர் காலத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு எவ்வாறு அமையப் போகின்றது என்ற கேள்வியும் எழாமலில்லை.

முன்னாள் போராளிகள் பலர் முன்னர் மக்கள் மத்தியில் தீவிரமாக - வினைத்திறன் மிக்க அரசியல் பணிகளில் ஈடுபட்டவர்கள் என்பதை மறுக்க முடியாது. அவர்கள் சாதாரண பிரஜைகளாக அரசி

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## LEASE

**2015 Civic** LX AUTO — $0 down @ 0.99% — $59.00 weekly + tax — LEASE FOR 48 MONTHS

**2015 CR-V** LX 2WD — $0 down @ 1.99% — $69.00 weekly + tax — LEASE FOR 60 MONTHS

# MIDTOWN Honda

3400 Dufferin Street
Toronto, ON M6A 2V1

**Across from Yorkdale Mall**

## FINANCE

**2015 Civic** LX AUTO — $0 down @ 0.99% — $61.00/weekly — FINANCE FOR 84 MONTHS + tax

**2015 CR-V** LX 2WD — $0 down @ 2.99% — $84.00/weekly — FINANCE FOR 84 MONTHS + tax

## COMING SOON 2016 HRV!



## CIVIC

| | | |
|---|---|---|
| 2008 Civic DXG | 134,090km | Pls Call |
| 2011 Civic DXG | 39,050km | $12,247 |
| 2012 Civic EX | 75,758km | $14,463 |
| 2012 Civic LX | 26,876km | $14,366 |
| 2012 Civic EXL | 70,347km | $15,652 + tax |

15 more Civic in STOCK to choose from

## ACCORD

| | | |
|---|---|---|
| 2011 Accord EXL | 58,000km | $18,075 |
| 2013 Accord LX | 33,051km | $19,998 |
| 2014 Accord LX | 30,158km | $19,988 |
| 2015 Accord EXL | 2,524km | $28,299 + tax |

5 more Accods in STOCK to choose from

## CR-V

| | | |
|---|---|---|
| 2011 CR-V LX 4WD | 80,880km | $17,692 |
| 2012 CR-V Tour | 49,204km | $25,388 |
| 2013 CR-V Tour | 66,447km | $26,495 + tax |

## PILOT

| | | |
|---|---|---|
| 2013 PILOT Tour | 45,000km | $36,399 |
| 2013 PILOT LX | 103,599km | $24,998 + tax |
| 2013 PILOT EXL | 44,322km | $33,499 |

## ODYSSEY

| | | |
|---|---|---|
| 2008 ODYSSEY TOUR | 94,188km | $18,588 |
| 2010 ODYSSEY TOUR | | $20,988 |
| 2011 ODYSSEY EX | 50,039km | $23,488 |
| 2012 ODYSSEY EX | 34,663km | $25,292 |
| 2013 ODYSSEY EXL | 65,325km | $30,973 |
| 2013 ODYSSEY LX | 78,725km | $22,134 |

Interest Starting from **1.99%** Honda Certified used vehicles

## ACURA BENZ LEXUS TOYOTA NISSAN

| | | | |
|---|---|---|---|
| 2013 Acura MDX | 67,547km | $33,888 | |
| 2012 Acura TL | 54,229km | $21,988 | |
| 2011 Acura TL | 87,693km | $18,988 | + tax |
| 2013 BMW 328i xDR | 38,995km | $33,499 | + tax |
| 2009 Toyota CamryLEV6 | 53,410km | $13,988 | |
| 2011 Toyota Corrolla CE | 44,040km | $11,980 | + tax |
| 2014 Nissan Altima | 27,658km | $16,988 | |
| 2011 Nissan Rogue | 67,705km | $14,999 | + tax |
| 2012 Dodge Caravan SE | 74,986km | $13,988 | + tax |
| 2013 Volkswagen Jetta | 30,471km | $17,899 | + tax |

**NO CREDIT BAD CREDIT NO PROBLEM!**

**FREE GIFT**
Call TONY for details




HONDA certified used vehicles come with 6 Years or 120,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**Tony Siva**
**647-269-0749**
tonymidtown@hotmail.com

**Visit my website www.midtownhondausedcars.com**

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647.799.0575 / 1.800.828.0656
ABDV PEST CONTROL
The Name You Can Trust



Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

# 'ஜனநாயகப்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

யல் மற்றும், சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு உரிமையுள்ளவர்களே. எனினும் இன்றுள்ள சூழ்நிலையில் அவர்கள் அரசியலில் தனித்து வேண்டியுள்ளது. சமூகப்பணிகளில் ஈடபட வேண்டியுள்ளது. மக்கள் மத்தியில் இப்புதிய கட்சி தொடர்பான நம்பிக்கை களை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தொடர்பு களைப் பேணும் வகையில் பல்வேறு



இறங்குவதென்பது எந்தளவிற்கு சாத்தியம் என்பதும் சிந்தனைக்குரியதே. அவர்கள் உருவாக்கியுள்ள இந்த அரசியல் கட்சி முதலில் மக்கள் மத்தியில் பணியாற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. இவற்றின் பின்னரே ஒரு அரசியல் கட்சியாக தேர்தல்களில் களமிறங்குவது சாத்தியமாகும்.

# வீடு / மனை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.



குறிப்பாக தொழில்புரிபவர்கள் என்றால், தொழில் செய்யும் இடத்தையும், தொழில் புரிவதனையும் உறுதிப்படுத்திகொள்ள வேண்டும். அனேக சந்தர்ப்பங்களில், சாதாரண குடிமகன் தனது வீட்டையோ, ஓர் அறையையோ, கீழ்ப்பகுதியையோ (Basement) வாடகைக்கு கொடுக்கும் போது தகவல்களை சரியாக சீர்தூக்கிப் பார்ப்பது இலகுவாக இருக்காமல் போகலாம்.

ஆனால் உங்களிற்கு ஆதனம் வாங்கித் தந்தவர்களின் உதவியை இந்த சந்தர்ப்பத்தில் பாவிப்பது சிறந்ததாகும். அவர்கள் இதில் நிறைய அனுபவம் கொண்டவர்களாக இருக்கக் கூடும். இவ்வாறான தேவைகளிற்காகவே, உங்களிற்கு நம்பிக்கையான ஓர் ஆதன முகவரை வைத்திருப்பது நல்லது. அவர் தகுந்த அறிவுரைகளையும் அறிவுறுத்தல் களையும் தரமுடியும்.

அண்மையில் ஒருவர் தனது வீட்டின் கீழ்பகுதியை வாடகைக்கு கொடுத்து, அவர்படும் அவஸ்தையினால், மற்றவர் களிற்கு இதனை தெரியப்படுத்துமாறு கேட்டதிற்காகவே இந்த தகவல்களை தெரியப்படுத்தியுள்ளேன். இவ்வாறான பல சோகக் கதைகளை வீட்டை வாடகைக்கு கொடுத்தவர்கள் கூறியுள்ளார்கள். எதற்கும் முன் கவனம் தேவை என்பதே இதன் நோக்கம்.

# குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

## 'யார் நல்லவன்? யார் கெட்டவன்?'

முதலில் அந்தத் தீர்ப்பை எழுத நீங்கள் யார்?

எல்லையில் ராணுவ வீரராய் துப்பாக்கி பிடித்து நிற்கிறீர்கள். பாகிஸ்தான் வீரர்கள் பத்துப் பேரைச் சுட்டுத்தள்ளுகிறீர்கள். நீங்கள் நல்லவரா, கெட்டவரா?

இந்திய ராணுவத்தினர் அழைத்துப் போனால் மெடல் கொடுப்பார்கள். பாகிஸ்தான் ராணுவத்தினர் அழைத்துப் போனால் சித்திரவதைக் கூடத்தில் போடுவார்கள். ஒரே செயலைச் செய்த போதும், ஒருவருக்கு நீங்கள் நல்லவர். இன்னொருவருக்கு நீங்கள் வெகு மோசமானவர். உங்களை யாருடன் அடையாளப்படுத்திக்கொள்கிறீர்களோ?, அதை வைத்துத்தானே நல்லது கெட்டதை உங்களால் தீர்மானிக்க முடிகிறது.

இயற்கை ஒருபோதும் பாரபட்சம் பார்ப்பதில்லை. செடி இருக்கிறது. தண்ணீரை பூசாரி ஊற்றினாலும், பூ பூக்கும், கொலைகாரன் ஊற்றினாலும் பூ பூக்கும்.


ஆனால் நீங்கள்? கெட்டவர் என்று யாரைப்பற்றித் தீர்மானித்தாலும், அவர் மீது வெறுப்பை வளர்க்கிறார்கள். முதலில் மனதளவில் அவரையும் உங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள். உங்கள் குறுகிய மனநிலையில் யாரைப் பற்றியும் தீர்ப்பு எழுதாதீர்கள்.'

- சற்குரு

MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC
mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வட்டிவீத மாற்றம் யூலை 15, 2015

வழமைபோல இந்த வருடத்தின் யூன் மாதத்திலும் ஆதன வியாபாரம் சிறப்பாகவே காணப்பட்டது. இந்த அதிகரிப்பு வாழ்ந்து விற்கும் வீடுகளிலும் (Resale), புதிய அடுக்குமாடி மனைகளிலும் காணப்பட்டது. போதியளவு ஆதனம் விற்பனைக்காக சந்தையில் காணப்படாததே ஒரு முக்கிய காரணமாகலாம். ஆனால் எதிர்வரும் மாதங்களில் கனடாவின் பொருளாதாரம் இறங்கு முகமாகவே காணப்படலாம் என IMF (International Monetary Fund) எதிர்வு கூறியுள்ளது.

ஏற்கனவே கனேடிய பொருளாதாரத்தில் இறுக்கமான நிலைமை ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. புதன்கிழமை யூலை 15, 2015ஆம் திகதி, கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர்களின் சந்திப்பில் வட்டிவீதத்தில் இறக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. வட்டிவீத இறக்கமே, பொருளாதாரத்தில் ஊக்கு சக்தியாக இருக்கலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறான வட்டிவீதம் யூலை 15, 2015 ஏற்பட்டால், ஏற்கனவே கனேடிய பொருளாதாரம் சிக்கலில் உள்ளது என்பதனை ஊகித்து கொள்ளலாம். இந்த வருடத்தின் ஆரம்பத்தில், கனேடிய மக்கள் எதிர்பாராத விதமாக மத்தியவங்கி வட்டிவீதத்தில் 1/4% இனால் இறக்கத்தை ஏற்படுத்தியது. வட்டிவீத இறக்கத்தின் பிற்பாடு, ஆதன வியாபாரம், உச்சத்தை அடைந்தது. கடந்த ஆறு மாதங்களாக ஆதன வியாபாரத்தின் மிக உந்து சக்தியாக குறைந்த வட்டிவீதமும் ஒரு முக்கிய காரணமாகக் கொள்ளலாம்.



ரொறொன்ரோவின் தனி வீடுகளின் சராசரி விலை ஒரு மில்லியனை தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக வட்டிவீத இறக்கம் ஆதன வியாபாரத்தை அதிகரிக்கும். பலவிதமான நேர்/முரணான விவாதங்களின் பின்னர் கனேடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை 0.75 இலிருந்து 0.50 ஆக குறைத்துள்ளது. இது இவ் வருடத்தின் இரண்டாவது வட்டிவீதக் குறைப்பாகும்

## நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

### தொடர் - 444

**ஆதனங்களை வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்திற்கு**

இன்றைய நிலைமையில், நம்மில் பலர் ஆதனத்தை வாங்கி ஒரு பகுதியை வாடகைக்கு கொடுக்கும் நிலையில் உள்ளார்கள். மண்ணிலும், பொன்னிலும் முதலிடுவது, சேதாரமாகப் போகாது என நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். எனினும் ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேணும் என்றும் உள்ளது. எதில் முதலீடு செய்தாலும் நிதானமாகவும் கவனமாகவும் அந்தந்த துறையில் அனுபவமிக்கவர்களின் அறிவுரையுடன் முதலீடு செய்தல் வேண்டும்.

ஆதனம் ஒன்றை வாடகைக்கு கொடுக்கும் போது, வாடகைக்கு வருபவர்களைப் பற்றிய தகவல்களை எடுத்து, அதனை உண்மையானதா என்பதனையும் தகுந்த முறையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தவறான தகவல்களை சரியென நம்பக்கூடியவாறு மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய அதிக சந்தர்ப்பங்கள் இன்றைய காலத்தில் காணப்படுகின்றது. இதில் மிகவும் கவனம் தேவை.

கணவன், மனைவி எனக் கூறி வாடகைக்கு வருவார்கள். வாடகைக்கு எடுப்பதற்கு வேடம் போடுபவர்களும் உண்டு. இது உண்மையான தா

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



**Raja Mahendran,** P.Eng.
*Broker / Owner*

**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

* INDEPENDENTLY OWNED AND OPERATED

## COMMERCIAL BUILDING FOR SALE

**SCARBOROUGH**
2300Sq.ft. Net rent $4500. Tenant will stay. Anither 4 or 5 years. Asking Price $875k
**MARKHAM & SHEPPARD**

## INDUSTRIAL BUSINESS FOR SALE

Over 40,000sq.ft building.
Lad Size 2.4 Acre. Out side storage. Plenty of parking. Owner lease back possible.
**MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH Asking Price $3.4 Million.**

## LAND FOR SALE

1 Acre land , No Building. You Build your own business place. (No Houses)
**MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH**
**Asking price @799,000**

## HOUSE FOR SALE

**CHICOSKY & NORTH OF STEELES BRAMPTON**
4 Bedroom link house for sale. 2 Years old. 3 Washroom. ***Asking Price $539k***

- 80 Rooms Branded Hotel Property, about 2.5 Hrs from GTA Room Revenue approx. 1.35 Millions and asking only 3.79 M Great Deal !
- 60 Rooms Branded Great looking property in 1.5 Hrs North west of GTA.Room Revenue approx. 1.0 Million and asking just 3.45 M.
- Great plaza in Scarborough with good mix of Tenants. Gross Income about 35K and Net Income about 24 K per month. Good Cap Rate !

## HOUSE FOR SALE

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Detached house for sale. 3 Level back split. 2 Washroom. Close to TTC accessibility.
**Asking Price $499,900**

## CONDO FOR SALE

**SHEPPARD & HWY 401**
3 Bedroom condo. for sale. 2 Washroom. Completely. renovated. New Appliances.
**Asking Price $260,000**


## CONDO. FOR SALE

**LAKESHORE & PARK (ETOBICOKE)**
1 Bedroom /2 levels condo for slae. 2 Washrooms. 4 Years new condo building. 5 Appliances.
**Asking price $349,900**

## CONDO. FOR SALE

**MCCOWAN & FINCH**
2 Bedroom condo. for sale. Swimming pool, 24hrs. ...., underground parking.
**Asking price $279,900**

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

வெளியே தொடர்ந்து வேட்டுச் சத்தம் கேட்டது காரணம் கேட்டேன். யாரோ ஒரு நடிகரின் படம் தோல்வியடைந்து விட்டதாம். இன்னொரு நடிகரின் ரசிகர் மன்றம் பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதாகச் சொன்னார்கள்.

என்ன அபத்தம் இது?

கால்பந்து விளையாடப் போகிறீர்கள். உங்களுக்கு எதிராக ஒரு அணி இருக்கும். அது உங்களைவிடத் திறமையான அணியாக இருந்தால் உங்களை கோல் போடவிடாமல் தடுக்கும். நீங்கள் அசந்த நேரம் உங்கள் பக்கம் போட்டு விடும். அதற்காக அந்த அணியை எதிரியாக நினைத்து மைதானத்தை விட்டே துரத்திவிடுவீர்களா என்ன?

எதிர்க்க இன்னொரு அணியே இல்லை என்றால், நீங்கள் நினைத்த நேரத்தில் பந்தை எடுத்துக் கொண்டு எதிர்ப்பக்கம் போகலாம். நடுவில் எத்தனை தடவை வேண்டுமானாலும் உதைத்து கோல் போடலாம். ஆனால் அதன் பெயர்


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org


கால்பந்தாட்டமா? அல்லது வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும் என்பதற்காக, உங்களுக்கு இணையாக இல்லாத கற்றுக்குட்டிகளுடன் மட்டும் விளையாடிக் கொண்டிருப்பீர்களா?

யமகுசி, கராத்தேயில் மிகச் சிறந்த வீரர் பல போட்டிகளில் பங்கேற்று வெற்றிகளைக் குவித்தவர். ஒருமுறை போட்டியில் அவர் தன் குருவையே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தனக்குத் தெரிந்த அத்தனைவிதத்திலும் முயற்சி செய்தார் யமகுசி. குருவை வீழ்த்த முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக பொறுமை இழந்தார் யமகுசி. கோபத்தில் தவறான சில வீச்சுகளை முயற்சி செய்ததில், நிறைய காயங்களானதுதான் மிச்சம். போட்டி முடிந்ததும், குருவை பணிந்து தன் தோல்விக்குக் காரணம் கேட்டார்.

'நீ என்னை எப்படிப் பார்த்தாய், மகனே?' 'போட்டியென்று வந்துவிட்டால், குரு, சிஷ்யன. எல்லாம் கிடையாது. உங்கள் பலவீனங்களைக் கண்டுபிடித்து, உங்களை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்றுதான் பார்த்தேன். ஆனாலும், முடியவில்லையே குருவே?'

குரு தரையில் ஒரு கோடு வரைந்தார். 'இதைச் சிறியதாக்க வேண்டுமானால், என்ன செய்வாய்?' யமகுசி அந்தக் கோட்டின் ஒரு பகுதியை அழித்துக் காட்டினார்.

'இதேகோடு அழிக்க முடியாதபடி பாறையில் இருந்தால்?' யமகுசி விடை சொல்லத் தெரியவில்லை.

குரு அந்தக் கோட்டின் பக்கத்தில் அதைவிட ஒரு பெரிய கோடு வரைந்தார். 'இப்போது முதல் கோடு சிறியதாகி விட்டதல்லவா?

யாரையாவது வெற்றி கொள்ள வேண்டுமானால், அவனைத் தாழ்த்த வேண்டுமென்ற முயற்சி செய்யாதே! அவனைவிட அதிகமாக உன் திறமையை வளர்த்துக் கொள். உனக்காக விளையாடு. அவனுக்கு எதிராக விளையாடாதே!' யமகுசி தெளிவடைந்தார்.

நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுடன் போட்டி போடுபவரை உங்கள் எதிரியாகப் பார்த்தீர்களானால், உங்கள் நிம்மதி தொலைந்து போகும்.

தெருவில் நடந்து கொண்டிருக்கிறீர்கள். முன்பின் தெரியாத ஒருவர் உங்கள் பக்கத்தில் வந்து காதருகில் 'முட்டாள்' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார். உடனே உங்கள் ரத்தம் கொதிக்கும். அப்படிச் சொன்னவர் உங்களைவிடச் சிறியவராக இருந்தால், சண்டைக்குப் போவீர்கள். வலியவராக இருந்தால்?

காலையில் எழுந்திருக்கிறீர்கள். ஜன்னலைத் திறக்கிறீர்கள். அவர் உங்கள் வீட்டையே பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறார். அவர் இப்போது எதுவும் செய்ய வேண்டாம்... காறித் துப்ப வேண்டாம். கல் எடுத்து அடிக்க வேண்டாம். சும்மா நின்றிருந்தாலே போதும். உங்களுக்குப் படபடப்பு வந்துவிடுமல்லவா? காரியங்கள் தாறுமாறாகிவிடுமல்லவா?

அவர் வலியவரோ எளியவரோ.. ஆனால், சொன்னபடி உங்களை முட்டாளாக்கிக் காட்டிவிட்டார் அல்லவா?

நீங்கள் நண்பர் என்று நினைப்பவருக்குக் கூட இவ்வளவு சக்தி இல்லையே?

யாரையாவது நீங்கள் எதிரியாக நினைத்தால், அவர் ஆற்றல் மிகுந்தவ ராகி விடுவதைக் கவனித்தீர்களா?

நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இங்கே யாருடனும் போர் புரிவதற்காக வரவில்லை. ஒருவரை அழித்தால் அடுத்தவர் தலை தூக்கிக் கொண்டு நின்றிருப்பார். உங்கள் ஆற்றலின் பெரும் பகுதி ஆக்கபூர்வமாகப் பயன்படாமல் அழிப்பதிலேயே வீணாகிவிடும்.

அடுத்தவரை எதிரியாக நினைக்காதீர்கள். பொறாமைக்கும் அச்சத்துக்கும் இடம் கொடுத்தால் உங்கள் திறமைதான் மழுங்கிப் போகும். எனவே நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உங்களுக்காக இருக்கட்டும். இன்னொரு வருக்கு எதிராக இருக்க வேண்டாம். அப்போதுதான் உங்களுக்கான சிகரத்தைச் சென்றடையும் வரை அந்தப் பணம் ஆனந்தமாயிருக்கும்.

முழுத்திறமையும் வெளிப்படுத்தும் விதமாகச் செயல்படுவதில் தான் உண்மையான வெற்றியே இருகிறது. அதற்கு உங்கள் உடல் மனம் இரண்டின் ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்து இருக்க வேண்டும். இதற்கு முறையான யோகாவை விடச் சிறந்த சாதனம் இல்லை.





## *Inner Engineering Program*

### *4 day Inner Engineering program*

### *led by an Isha teacher trained by Sadhguru Coming to Toronto*

***TIMINGS:***

Thursday August 6: 6:30pm – 9:30pm
Friday August 7: 6:30pm – 9:30pm
Saturday August 8: 8:30am – 7:00pm
Sunday August 9: 7:30am – 7:00pm

Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.

Attendance for all sessions is required.
VENUE: Latvian Canadian Cultural Centre
4 Credit Union Drive, Toronto, ON M4A 2N8, Canada.
CONTACT: Email: toronto@ishafoundation.org
Phone: 416-300-3010
Registrations online at : www.innerengineering.com/live/toronto

# எப்படியிருக்கும் 2016 தமிழக சட்டமன்ற தேர்தல்? தயாராகும் அரசியல் கட்சிகள்

தமிழக அரசியல் களம் விறுவிறுப்படையத் தொடங்கியுள்ளது. சென்னை மெட்ரோ ரயிலுக்குக் காரணம் நீயா நானா என திமுகப் பொருளாளர் மு.க. ஸ்டாலின் அறிக்கைப் போரைத் தொடங்கி வைத்தார். இதற்கு, அஇஅதிமுகத் தலைவியும் தமிழக முதல்வருமான செல்வி. ஜெய லலிதாவும், தனது நீண்ட மௌனத்தைக் கலைத்துவிட்டு, விரிவான விளக்கங்களு டன் பதில் அறிக்கைப் போர் தொடுத்தார். இன்னொரு பக்கம் தேமுதிக தலைவர் விஜயகாந்த், ஸ்டாலினுக்குப் போட்டியாக மெட்ரோ ரயிலில் பயணம் செய்து, மக்களுடன் நெருங்கி வருகிறார். மற்றொரு பக்கம் வைகோ, திருமாவளவன், கிருஷ்ண சாமி, கம்யூனிஸ்டுகள், பாஜக என சிறிய கட்சித் தலைவர்கள் கூட்டணி வாய்ப்புக்கான சந்திப்புகளை நடத்தி வருகிறார்கள். எப்படியிருக்கும் 2016 தமிழகச் சட்டமன்ற தேர்தல்? ஓர் அலசல்.

அதிமுகவையும் ஜெயலலிதாவையும் விமர்சிப்பவர்கள்கூட ஒப்புக்கொள்ளும் ஒரு விடயம், தமிழகத்தின் தனிப்பெரும் அரசி யல் கட்சி அதிமுக என்பதுதான். 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு திமுகதான் ஆட்சி அமைத்தது. ஆனால், அந்தத் தேர்தலிலும் அதிமுக 1 கோடியே 2 லட்சம் வாக்குகள் பெற்றிருந்தது. திமுக 82 லட்சம் வாக்குகள்தான் பெற்றிருந்தது. அதாவது, திமுகவைவிட 20 லட்சம் வாக்குகள் கூடுதலாக அதிமுக பெற்றிருந்தது. அடுத்து வந்த 2011 தமிழக சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வெற்றிபெற்றது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற இடைத் தேர்தல்கள் மட்டுமல்லாமல் உள்ளாட்சி, மக்களவை தேர்தல்களிலும் அதிமுக தனித்து நின்று வெற்றி பெற்றுள்ளது. மேலும், ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றிக் கான வாக்கு வித்தியாசமும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. 2011 தமிழக சட்டமன்றத் தேர்தலில் 38.4 சதவிகிதமாக இருந்த அதிமுகவின் வாக்கு வங்கி, தமிழ் நாடு உள்ளாட்சித் தேர்தலில் 39.02 சதவிகிதமாக அதிகரித்தது. 2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 44.3 சதவிகிதமாக அதிகரித்தது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் திமுக பெற்ற வாக்கு சதவிக- ிதம் 23.6தான். இது அதிமுகவின் பலம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுவதுடன் அதன் தனிப்பெரும் செல்வாக்கையும் காட்டுகிறது. இவ்வளவு பெரிய வாக்கு வங்கி இன்று தமிழகத்தில் வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது. அதிமுகவுக்கும் திமுகவுக்கும் இடையேயான இந்த வாக்கு சதவிகித வித்தியாசம் காரணமாக, 2014 நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே, 2016 சட்டமன்றத் தேர்தலையும் தனித்து சந்திக்கும் தைரியத்துடன் இருக்கிறது அதிமுக திமுகவோ கூட்டணிக்கான வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருக்கிறது.



ஓர் ஆட்சி மீதான எதிர்ப்பலை என்பது அந்த ஆட்சியின் முதல் இரண்டு வருடங்க ளிலேயே உருவாகிவிடும். 2011இல் அதிமுக ஆட்சியமைத்தது. மூன்று ஆண்டு களுக்குப் பிறகு 2014இல்தான் நாடாளு மன்றத் தேர்தல் வந்தது. ஆனாலும், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் 39 இடங்களில் 37 இடங்களைக் கைப்பற்றியது அதிமுக. இது அதிமுக ஆட்சி மீது எதிர்ப்பலை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. 2011 தேர்தலில் மின்வெட்டு திமுக எதிர்ப்ப லைக்கு முக்கியக் காரணமாக இருந்தது. இப்போது மின்வெட்டு பிரச்சினை சரி செய்யப்பட்டுள்ளது. மட்டுமல்லாமல் மின் வெட்டுப் போல் ஆட்சிக்கு கெட்டப் பெயரை உருவாக்கித் தரும் புதிய பிரச்சினைகளும் உருவாகவில்லை. மேலும் அம்மா உணவகம், அம்மா மருந்தகம் போன்ற பல்வேறு திட்டங்களின் பலன்கள் நேரடியாக மக்களைச் சென்று அடைந்திருப்பது, ஜெயலலிதா கைது காரணமாக அவர் மீது உருவாகியிருக்கும் அனுதாபம் போன்றவை காரணமாகவும் அதிமுக வாக்கு வங்கி அதிகரித்துள்ளது என அரசியல் விமர்சகர்கள் கணிக்கிறார் கள். இந்த நம்பிக்கையில்தான், 'ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் 2016 தமிழக சட்டமன்ற தேர்தல் வெற்றிக்கான முன்னோட்டம்' என சொல்லியுள்ளார் ஜெயலலிதா.

ஆனால், '2014 நாடாளுமன்றத் தேர்தலை வைத்து 2016 தேர்தல் முடிவைக் கணிக்க முடியாது' என்றும் சில அரசியல் விமர்சகர்கள் சொல்கிறார்கள். பொதுவாக கடந்த சில சட்டசபைத் தேர்தல்களில் மக்கள் மாறி மாறித்தான் வாக்குகளைப் போட்டிருக்கிறார்கள் என்பது இவர்கள் வாதம். மேலும், அதீத நம்பிக்கையில் கூட்டணி அமைப்பதிலும் ஜெயலலிதா தவறுகள் செய்வார் என்பதை இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். 2006 தேர்தலில் அதிமுகவுக்கே வெற்றி வாய்ப்புகள் இருந்தது. ஆனால், கூட்டணி அமைப்பதில் தவறு செய்ததன் விளைவு, திமுகவைவிட 20 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றும், ஆட்சியை திமுகவிடம் பறிகொடுத்தது.

இந்நிலையில், திமுக திட்டமிடுவது போல் ஒரு பலமான கூட்டணி அமைந்தால், கூட்டணிகள்தான் வெற்றித் தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது. ஆனால் ஸ்டாலின், விஜயகாந்த், அன்புமணி ராமதாஸ் எல்லோருமே முதலமைச்சர் கனவில் இருக்கிறார்கள். இந்நிலையில் இவர்கள் அனைவரும் ஒரு கூட்டணிக்குள் இருப்பது சாத்தியமில்லை என்றும் சிலர் சொல்கிறார்கள். திமுகவுடன் கூட்டணி சேர தயாராக இல்லை என ராகுல்காந்தி வெளிப்படையாக அறிவித்துள்ளார். அன்பு மணி ராமதாஸை முதல்வர் வேட்பாளராக அறிவித்துள்ள ராமதாஸ், ஸ்டாலினை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்வாரா என்பது கேள்விக் குறிதான். இதனிடையே, சமீபத்தில் டெல்லி சென்று, அனைத்துக் கட்சி பிரதி நிதிகளோடு பிரதமரை சந்தித்த விஜயகாந்த், அனைவரும் வெளியே வந்த பிறகு, தனியாகப் பிரதம- ரை சந்தித்திருக் கிறார். அப்போது அவர், தன்னைத் தமிழகத்தில் முதல்வர் வேட்பாளராக அறிவித்தால், பிஜேபிக்கு கணிசமான இடங்களை விட்டுத் தருவதாகச் சொன்ன தாகவும் அதற்கு மோடி மறுத்து விட்டதாகவும் ஒரு தகவல் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது, பலமான கூட்டணி அமை- வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு தான் என்றும் சொல்லப்படுகிறது. அப்படியே அமைந்தா லும் அது மனமொத்தக் கூட்டணியாக இருக்காது என்கிறார்கள்.

சென்னை மெட்ரோ ரயில் நீயா நானா யுத்தத்தில் கடைசி ஆயுதமாக ஜெய லலிதா உடல்நலம் பற்றி உலா வரும் தகவல்களையே ஆயுதமாகப் பயன்படுத்தி னார் கருணாநிதி. உடல்நலம் பாதிக்கப் பட்டிருக்கும் ஜெயலலிதா ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் எனப் பேசியுள்ளார். மெட்ரோ ரயில் கொண்டு வந்தது யார் என்பதில் பதிலுக்குப் பதில் மல்லுக்கு நின்ற ஜெயலலிதாவும் அதிமுக மந்திரி களும் இப்போது அமைதி காக்கிறார்கள்.

**- சிவதாணு -**

இது ஜெயலலிதாவுக்கு உண்மையில் உடல்நலம் சரியில்லையோ என்ற எண்ணத்தை அதிகமாக்கி யிருக்கிறது. ஆனால், கருணாநிதியின் இந்தப் பேச்சு அவர் மீதான வெறுப்பை அதிகரிப்பதுடன், ஜெயலலிதாமீது இருந்து வரும் அனுதாபத்தை அதிகரிக்கத்தான் செய்யும் என்றும் ஒரு சாரார் சொல்கிறார்கள்.

2016 தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்கள் உள்ளது. தேர்தல் அரசியலில் 10 மாதங்கள் என்பது நீண்ட காலங்கள். இக்காலகட்டத்தில் சூழல் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். காத்திருந்து கவனிப்போம்.


ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# விளையாட்டுத்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

## சிலியிடம் உதை வாங்கினாலும் தரவரிசை யில் முதலிடம் பிடித்த ஆர்ஜென்டினா!


உலக கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) வெளியிட்டுள்ளது. இதில் உலகக்கிண்ணம், கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் இறுதிப் போட்டி வரை சென்று கிண்ணத்தை தவறவிட்ட ஆர்ஜென்டினா அணி முதலிடம் பிடித்தது. இதனால் உலகக்கிண்ணத்தை வென்று முதலிடத்தில் இருந்த ஜேர்மனி அணி 2ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கோபா அமெரிக்க தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற சிலி அணி, 8 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்தில் இருக்கிறது. மேலும் நெதர்லாந்து (5ஆவது இடம்), ருமேனியா (8ஆவது), இங்கிலாந்து (9ஆவது), வேல்ஸ் (10ஆவது) அணிகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

அதே சமயம் பெல்ஜியம் (3ஆவது இடம்), பிரேசில் (6ஆவது), ஸ்பெயின் (12ஆவது), உருகுவே (13ஆவது) அணிகள் பின்னடைவை சந்தித்துள்ளன. கொலம்பியா (4ஆவது இடம்), போர்த்துக்கல் (7ஆவது) அணிகள் தங்களது தற்போதைய இடத்தை தக்க வைத்துக் கொண்டன.

## 6ஆவது முறையாக செரீனா பட்டம் வென்று அசத்தல்



விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 'நம்பர் வன்' வீராங்கனையான அமெரிக்கா வின் செரீனா வில்லியம்ஸ், 20ஆம் நிலை வீராங்கனை யான ஸ்பெயினின் கார்பின் முகுருஜா மோதினர். இதில் அனுபவ வீராங்கனையான செரீனா, தனது அதிரடி ஆட்டத்தால் முகுருசாவை நிலைகுலையச் செய்து, 6-4, 6-4 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். இதன் மூலம் 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டதை வென்ற செரீனாவுக்கு, இது 6வது விம்பிள்டன் பட்டமாகும்.



**எஸ். கணேஷ்**

www.vlambaram.com
www.tamilvanakkam.com

# கவிஞனே கண்ணதாசா



எண் திசைகளிலும் வாழும் தமிழ் அன்பர்களின் நெஞ்சில்
என்றென்றும் நிறைந்திருக்கும் கவியே
காதலை இழந்தும் கவிதைகள் புனைந்து
காவியம் படைத்தவன் நீ
சுயமான வாழ்க்கையில் சுயமாகக் கருவெடுத்து
சுதியோடு நயம் சேர்த்து சுவையான பாடல்களை
உயிர் உள்ள பாடல்களாய்ப் பாடி
உலகுக்குத் தந்தவா!

உரைக்கல்லைப் பொன்னாக்கும் தங்கம் போல்
உரை நடையில் வரிபிளந்த கவிதைகள்
கடலாழம் கொண்ட கருத்தாழத்தோடு
காலங்கள் மறக்காத பாடல்கள்
நாத்திக வாதியாய் நாட்டிலே சிலகாலம் நீ
நாடகமாடினாய் பின் ஆத்திகனாய் மாறி
அன்பர்கள் பலரும் போற்றிட
அரங்கத்தில் ஏறினாய்
கூத்தாடும் மேடையிலே கொடிகட்டிப் பறந்து
குறைவின்றி வாழ்ந்து வந்தாய் அப்போ
குணம் கெட்ட சிலரோடு சேர்ந்து
கூடிய செல்வத்தை இழந்தாய்
கன்னியர் போலவே கண்ணனின் மீது ஈடில்லா
காதல் கொண்டவனானாய் அதனால்
இந்துமதம் பற்றிய இனிய கருத்துக்களை
இனிப்பாகத் தந்தவன் நீ

பக்திச்சுவை பாட்டும் பாவை சுவைபாட்டும்
பாட எழுதிக் கொடுத்த பெரும் பாவலன் ஆனாய்
நவகாலச் சமுதாயக் கருக்களோடு பாடி எல்லோரையும்
நாவசைக்க வைத்த பாடகன் நீ
இன்று உனது பிறந்தநாள் அனைத்து நேயர்கள்
நாம் எல்லாம் நின்புகழ் வாழ்க வளர்க என
வாழ்த்தி வணங்குகிறோம்.

- கவிநாதம் பரந்தாமன் -

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# உடல் எடை கூடுவதற்கான காரணங்கள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

நவீன வாழ்க்கை முறையில் எவ்வளவோ வசதிகள் வந்துவிட்டன. வசதிகள் பெருகப் பெருக உடல் உழைப்பானது குறைந்து செல்கின்றது. ஆனால் பசி மட்டும் குறைவதில்லை. அது ஒருபுறம் இருக்க நாகரிகம், பொருளாதார வசதிகளும் கூடும்போது ருசியான அதிக சத்துள்ள உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. ஐஸ்கிறீம், குளிர் பானங்கள், சொக்லேட் (Chocolate) முதலிய இனிப்புப் பண்டங்கள் அதிகம் சாப்பிடுவதாலும் உடல் தசைகள் பருமலடைகின்றன. அத்துடன் உடல் உருவமும் பருத்து தடித்து எடையைக் கூட்டுகின்றது.

### உடல் பயிற்சியும் உடல் எடையும்

உடல் பயிற்சிகள் செய்வதால் அதிக கலோரிகள் செலவிடப்படுகின்றன. அதனை ஈடுசெய்ய அதிகமாக உண்பர். தொடர்ந்து பயிற்சி செய்துவந்தால் கலோரிகள் எரிக்கப்பட்டு சமன் செய்யப்படும். ஆனால் சூழ்நிலை காரணமாகவோ அல்லது இரத்த அழுத்தம் போன்ற உடல் நோய்களின் காரணமாக எந்தவிதமான பயிற்சிகளும் செய்யாது விடுகின்றனர். இந்த நிலையிலும் உண்ணும் அளவைக் குறைப்பதில்லை. இதனால் உடல் எடை கணிசமாகக் கூடுகின்றது.



### பகல் தூக்கமும் உடல் எடையும்

பலர் பகல் உணவு உண்டவுடன் ஒரு மணிமுதல் மூன்று மணிவரை தூங்கி எழுவர். குறிப்பாக பெண்கள், நோயாளிகள், சொந்த தொழில் செய்பவர்கள் போன்றோர் பகலில் தூங்கும் சாத்தியம் நிறைய உண்டு. பகலில் தூங்கினால் 16 வகையான வாத நோய்கள் வரலாம் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

1. பகல் உணவு உண்டதும் ஓடுவதோ விரைவாக நடப்பதோ கூடாது. அத்துடன் படுத்து உறங்குவதும் கூடாது.

2. பகலில் தூங்குவது ஒரு தீய பழக்கம். இதனால் நேரம் வீணாவதோடு பித்தம், அஜீரணம், சோம்பேறித்தனம் என்பன உண்டாகும், வாழ்நாளும் குறைகிறது.

3. பகல் தூக்கம் என்பது மரணத்தின் ஒத்திகை என்கிறது ஒரு மருத்துவப் பழமொழி. காரணம் தூங்கும் போது தலைப்பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் வரும். வயிற்றுப்பகுதிக்கு இரத்த ஓட்டம் குறைவதால் ஜீரணம் பாதிக்கப்படுகிறது. அதனால் சுரப்பு நீர் அதிகமாக சுரக்க வேண்டியுள்ளது. உண்ணும் உணவானது புளிக்க உடலில் வாத தோஷம் அதிகமாகி உடல் எடைகூடுகிறது.

### அதிக கோப்பி தேநீரும் உடல் எடையும்

இப்போது நம்மில் அதிகமானோர் கோப்பி, தேநீர் உதாரணமாக (Tim Horton) போன்றவற்றை அடிக்கடி அருந்துவதனை தினமும் காண்கிறோம். அவர்களுக்கு பசி உணர்ச்சி குறையும். ஆனால் கோப்பியிலுள்ள காபினும் தேனீரில் உள்ள நிக்கோற்றினும் இரத்தத்தில் கலந்து உடல் எடையைக் கூட்டுவதோடு மயக்கத்தையும் ஏற்படுத்தும்.


### மதுப் பழக்கமும் உடல் எடையும்

மதுபானங்களை மட்டும் குடிப்பதால் உடல் எடை கூடுவதில்லை. ஆனால் மது குடிப்பதும் அவர்கள் உண்ணும் உணவின் அளவு, அதிக கொழுப்பு, காரம், இனிப்பு அதிகமுள்ள உணவு வகைகள் உடல் எடையை அதிகரிக்கச் செய்யும். குடித்ததும் மதுவில் உள்ள சத்து உடன் இரத்தத்தில் கலந்து சிறு மூளையையும் பாதிப்பதால் மூளை நரம்புகள் பலயீன மடைகின்றன. அதனால் பசி உணர்ச்சி யின் அளவு தெரியாமல் அதிகமாக உண்ணுவார்கள். நாளடைவில் உடல் எடை, தொந்தி ஏற்படும்.

### மலச்சிக்கலும் உடல் எடையும்

அடிக்கடி மலச்சிக்கல் ஏற்படுபவர்களுக்கு உடல் எடை அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. மலச்சிக்கல் ஏற்பட்டு மலம் பெருங்குடலினுள் இறுகி விடும்போது அதிலுள்ள நீர் உடலினுள் உள்வாங்கப்பட்டு நாளடைவில் அது இரத்தத்துடன் கலந்து ஊளைச் சதை வளர ஏதுவாகின்றது. அத்துடன் இரத்தம் மாசுபடுத்தப்பட்டு ஓட்டம் சற்று தடைப்பட்டு மூட்டுகளில் தேங்கி ஆதரைடிஸ் போன்ற மூட்டு வலிகளையும் உருவாக்குகிறது. இந்த மலச்சிக்கலைப் போக்க பொருத்தமான உணவுத் திட்டத்தைக் கடைப் பிடிப்பதுடன் தகுந்த உடற்பயிற்சியையும் செய்துவர வேண்டும்.

### மன அழுத்தமும் உடல் எடையும்



மன அழுத்தம், மன உளைச்சல், எதிர்மறையான தொடர்ச்சியான சிந்தனை போன்றவற்றால் உடலிலுள்ள நாளமில்லா சுரப்பிகள் பாதிப்படைந்து அவை சுரக்கும் ஹோமோன்ஸ் அளவுகளில் மாறுபாடான தன்மை ஏற்பட்டு உடல் எடை அதிகரிக்கும். உதாரணமாக தைரொய்ட் சுரப்பிகள் சுரப்பில் மந்த நிலை ஏற்பட்டால் உடல் எடை நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் காணமுடியும். சோம்பலும் அதிகமாகும்.

இதற்கு யோகாவில் சர்வாங்க ஆசனம் ஒன்றுதான் நிரந்தர தீர்வினை தரும்.


கனேடிய
இலங்கை
இந்திய
சர்வதேச
விளையாட்டு
செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை
பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7
NEWS
www.tamilvanakkam.com




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அன்புடைமை - 22

காதலில் இருவருக்குமிடையே உள்ள இரசாயனம் மிகவும் முக்கியமானது. "ஒருவர் இன்னொருவரால் கவரப்படுவதற்கு கலாச்சாரம், சமூகப் பொருளாதாரம், திறமை, மதிப்பு போன்ற காரணங்களுடன் உயிரியல் காரணங்களும் ஏதுவாக உள்ளன" என்று ரட்கேர்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மானிடவியல் வல்லுனர் கலாநிதி ஹெலன் பிஸ்சர் (Helen Fisher) அவர்கள் கூறியுள்ளார். இவர் வை ஹிம் வை ஹேர் (Why Him? Why Her?) என்ற நூலின் ஆசிரியரும் ஆவார். அவர் மேலும் எம்மிடம் உள்ள டொப்பமைன் (Dophamine), செரற்றோனின் (Serotenin), ரெஸ்டோஸ்டிரோன் (Testosterone),ஒஸ்ரோஜென் (Oestrogen) போன்ற தூண்டி முட்கள் (ஹோர்மோன்கள் - Hormones) ஆகியவற்றால் ஒரு இரசாயன குடும்பத்தைச் சார்ந்திருக்கின்றோம் என்று கூறுகின்றார். உதாரணமாக அதிக ரெஸ்டோஸ்டிரோன் கொண்ட ஒருவர் அதிக ஒஸ்ரோஜென் கொண்ட ஒருவரால் அதிகம் கவரப்படுகின்றார். ஒருவரின் உளவியல் காரணங்களும் அதிக பங்கை வகிக்கின்றன. காதல் உணர்வைப் பசுமையாக வைத்திருப்பதற்கு காதல் உணர்வைப் புதுப்பித்து வைத்துக் கொள்ளல், தொடுகை, பாலியல் தொடர்பு போன்றவை உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கணவன் மனைவிக்கிடையே உள்ள ஆரோக்கியமான பாலியல் தொடர்பினால் பல நன்மைகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடல் எதிர்ப்புச் சக்தி சீராக இருக்கவும், இரத்த ஓட்டம் எற்படவும், சிறுநீர்ப்பை சரியாக இயங்கவும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் ஆரோக்கியமான உடலுறவு துணை நிற்கும் என்று ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றைவிட மேலும் ஒரு நல்ல உடற் பயிற்சியாகவும், மாரடைப்பினைத் தடுத்தும், உடலில் ஏற்படும் வலிகளை நீக்கியும், புரோசுட்டேட் புற்றுநோய் அல்லது முன்னிற்குஞ்சுரப்பிப் புற்றுநோய் இனைத் தடுக்கவும், நித்திரை சீராக இருக்கவும், அழுத்தத்தைக் குறைக்கவும் ஆரோக்கியமான உடலுறவு உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கணவன், மனைவியர் தமக்கிடையில் உள்ள பாலியல் உணர்வுகளை புறக்கணிக்காது இருத்தல் உடல் நலத்திற்கும், அன்புடைமை கொண்டு வாழ்வதற்கும் முக்கியமானது என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். காதல் உணர்வு மூளையில் ஏற்படுவதா, அல்லது இதயத்தில் ஏற்படுவதா என்ற குழப்பம் பலருக்கும் ஏற்படுவதுண்டு. இது உண்மையில் மூளையில் ஏற்பட்டாலும், இதயமும் இந்த தொழிற்பாட்டில் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. "காதல் இல்லாத வாழ்க்கை பழங்களைக் கொண்டிராத மரம் போன்றது" ("Life without Love is like a tree without blossoms of fruit") என்று ஓர் ஆங்கில முதுமொழி கூறுகின்றது.

பொதுவாக கவர்ச்சி காதலில் முக்கியமான தாகத் தோன்றும். ஆனால் உண்மையில் காதல் என்னும் உன்னதமான உணர்ச்சி இவற்றிற்கு அப்பாற்பட்டது. இந்த உணர்ச்சிக்கு உட்படுபவர்களால் தமது காதலரின் முக அசைவுகளை, உடல் அசைவுகளை, உளவியல் எண்ணங்களை தமது மனத்திரையில் காண்பார்கள். தமது காதலரின் இன்ப, துன்பங்களில் பங்கு கொள்ளும் மனத்தைக் கொண்டிருப்பர்.




காதல் என்பது மிகவும் முக்கியமான ஆனால் அதிகளவிற்கு பிழையாக விளங்கிக் கொள்ளப்படும் ஓர் உணர்ச்சி ஆகும். நமது மூளை மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளப்படும் வகையில் அமைந்துள்ள உறுப்பு. அதனால் தனிமையையும், ஏற்காமையையும் வாழ்க்கைக்கு மிகவும் அச்சுறுத்தலாகவுள்ள விடயங்கள். கலாச்சார மற்றும் உயிரியல் காரணங்களுக்காக நமக்கு முழுத்திருப்தியளிக்கும் நிலைத்த காதல் தொடர்பு வாழ்க்கையில் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். நிலைத்த காதல் வாழ்க்கை தன்னிச்சையாக அமைந்து விடாது. அதற்காக தன்னலமற்ற செயலற்ற தன்மை, பாதிப்பை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, கடின உழைப்பு ஆகியவற்றை ஒருவர் கொண்டிருத்தல் வேண்டும்.

நமது பயிற்சியால் அதிக காதல் உணர்வைக் கொண்டவர்களாக நம்மை மாற்றிக் கொள்ள முடியும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திருமணமான ஆண்களின் ஆயுள் திருமணமாகாதவர்களைவிட அதிகமாக உள்ளது என்று ஆய்வுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. காதலில் நாங்கள் கவனத்தைச் செலுத்தினால் அதன் வலிமை கூடும். ஒருவரை ஒருவர் பாராட்டி மகிழ்ச்சியுடன் இருப்பது காதல் வாழ்க்கையில் முக்கியமானது. நமது செயற்பாடுகளாலும், பேச்சாலும் காதலரை அல்லது காதலியைப் பாராட்டி மகிழ்ச்சிப்படுத்தும் பொழுது அவர்களையும் இன்புறச் செய்து நாமும் இன்பம் அடைகின்றோம். ஒருவர் மீது அதிக காதல் கொண்டிருக்கும் பொழுது மற்றவர்களிடம் அன்பு செலுத்த முடியாது என்று எண்ண வேண்டியதில்லை. காதல் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் திருப்தி பொதுவாக அன்புடைமை கொண்டவர்களாக இருக்க வழிவகுக்கும் என்று கூறப்படுகின்றது. காதல் என்ற உணர்விற்கு இருவருக்குமிடையில் நம்பிக்கையும், பாதுகாப்பும் அவசியம். வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், தவறிழைக்கப்பட்டவர்கள் ஒரு காதல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு அதிக சிரமத்தை எதிர்கொள்வார்கள்.

திருமண வாழ்க்கையில் ஈடுபடும் தம்பதிகள் ஈடுபாடு, சுய புரிந்துணர்வு, தன்னலமற்ற பாங்கு, மாற்றம் அல்லது வளர்ச்சியில் விருப்பம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நான் என்ற நிலையில் இருந்து மாறி நாம் என்ற நிலை ஏற்பட வேண்டும். இருவருக்கிடையில் உள்ள தொடர்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாளாந்த வாழ்க்கையில் குறிக்கப்பட்டளவு நேரத்தை ஒன்றாகச் செலவழித்து மகிழ்ச்சியுடனும், விட்டுக் கொடுப்புடனும், அன்புடைமை கொண்டவர்களாகவும் இருந்திட வாழ்க்கை இனிதே அமைந்து விடும்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்
கணினித் தமிழ் 'வரலாறும் வளர்ச்சியும்'
நிகழ்ச்சி நிரல்
கடந்த மாதம் நடந்த இலக்கிய நிகழ்வுகள்
ஐயந்தெளிதல் அரங்கு
நாள்: 25-07-2015
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
3A, 5637, Finch Avenue East,
Scarborough, M1B 5K9
தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

# இளம் சந்ததியினருக்கு சிறந்த ஆயுள் காப்புறுதித்திட்டம்

## கனடிய தகவல் தொடர் 233

***Best Life Insurance Plan for Younger Generation***

ஆயுள் காப்புறுதித் திட்டத்தில் மூன்று முக்கியமான கோட்பாடுகள் உள்ளடக்கப் பட்டுள்ளதாக காப்புறுதியுடன் தொடர் புடைய கனடாவின் நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அவையாவன:

### 1. தங்கியிருக்கும் குடும்பத்திற்கு பாதுகாப்பு (Protection to the family)

இன்றைய காலகட்டத்தில் நோயும், மரணமும் வயது எல்லை என்ற வரையறை இன்றி எல்லோரையும் பாதிக்கின்றது. தங்கி யிருக்கும் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்த வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டு முடிப்பதற்கு ஆயுள் காப்புறுதி மூலம் கிட்டுகின்ற பணம் கைகொடுத்து உதவுகிறது.



### 2. அடுத்த சந்ததியினருக்கு சிறந்த முதலீடு
(Best investment for next generation)

அடுத்த சந்ததியினருக்கு குறைந்த கட்டுப்பணத்தில் உருவாக்கிக் கொடுக்கும் அருமையான முதலீட்டுத் திட்டமாக ஆயுள் காப்புறுதித் திட்டத்தினைத் தவிர வேறு எதுவும்.

ஒரு மில்லியன் டொலர்களுக்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்யும் ஒருவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் அவரினால் ஒரு மில்லியன் டொலர்களை தனது வாழ்நாளில் கட்டுப்பணமாகச் செலுத்த முடியாது என்பது உண்மையாகும். ஆனால், அவர் நீண்ட காலம் வாழ்ந்து மரணமடையும் போது மிகப் பெரியதொரு தொகை அவரது அடுத்த சந்ததியினருக்கு கிடைக்கின்றது.

### 3. முதுமைக்காலத்தில் சிறந்த வருமானம்
(Ideal income at retirement age)

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் ஒரு பணப் பெறுமதி (Cash value) படிப்படியாக வளர்ந்திருக்கும். அது சிலவேளைகளில் கட்டுப்பணமாக செலுத்தப்பட்ட தொகை-யவிட அதிகமாகவும், வட்டிக்கு வட்டி என்ற விதத்திலும் வளர்ச்சியடைந்திருக்கும். வயோதிப காலத்தில் அதிலிருந்து தொகையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ ஒரு குறிப்பிட்டளவு பணத்தினை மீளப்பெறலாம். மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களும் ஒரு குறிப்பிட்ட ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் அடைய முடியும் என்பதனை நம்புவது சிரமமாக இருக்கின்றதா?

இப்படியான புதிய ஆயுள் காப்புறுதித் திட்டங்கள் கூடியளவுக்கு இளைய தலைமுறையினருக்கு மிகவும் உகந்தவை என சில காப்புறுதி நிறுவனங்கள் பரிந்துரைக்கின்றன. அதாவது ஆயுள் காப்புறுதி என்பது வாழும் காலத்தில் ஒரு காமதேனு, மரணமடைந்தாலும் ஒரு காமதேனு என்கின்றனர் காப்புறுதி நிபுணர்கள்.

உதாரணமாக முப்பது வயது நிரம்பிய ஆண் ஒருவரை எடுத்துக்கொள்வோம். அவர் சிறந்த ஆரோக்கியத்துடன் விளங்குகிறார். அத்துடன் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக புகைபிடிக்கும் பழக்கமும் அற்றவர். அவர் ஐந்து லட்சம் டொலர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனத்தில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்துகொள்கிறார். இதற்காக அவர் மாதா மாதம் செலுத்த வேண்டிய தொகை 341.10 டொலர்கள் என அந்நிறுவனம் நிர்ணயிக்கின்றது. அவர் 65 வயதுக்குப் பின் எதுவிதப் பணமும் செலுத்தத் தேவையில்லை என காப்புறுதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவர் 65 வயதினை அடையும்போது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர் எவ்வளவு தொகை பணத்தினைச் செலுத்தியிருப்பார்?

341.10 டொலர்கள் X 12 மாதங்கள் X 35 வருடங்கள் = 143,262 டொலர்கள்

இங்கு காப்புறுதி தொடங்கிய நாளிலிருந்து உயிரிழப்பு எந்த ரூபத்தில் நடந்திருந்தாலும் ஐந்து லட்சம் டொலர் அவரது குடும்பத்தினருக்கு பணமாக கிட்டுகின்றது. இதில் தற்கொலையினாலான மரணம் என்றால் முதல் இரு வருடங்கள் விதிவிலக்கு.

எப்பொழுதோ நடக்கவிருக்கும் உயிர் இழப்புக்காக படிப்படியாக செலுத்தும் ஆகக்கூடுதலான தொகை 143,262 டொலர்களாக இருக்கின்ற போதிலும், அவரது குடும்பத்தினருக்கு கிட்டுகின்ற தொகை ஐந்து லட்சம் டொலர்களாகும்.

ஒவ்வொரு காலகட்ட வயதில் எவ்வளவு தொகை ஆயுள் காப்புறுதிக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதை எவ்வறு அறிந்துகொள்வது? பின்வரும் அட்டவணை அதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

| | உறுதியாக செலுத்தி முடிக்கப்பட்ட ஆயுள் காப்புறுதித் தொகை | ஆயுள் காப்புறுதியில் இருக்கும் உத்தரவாதத்திலான பணப் பெறுமதி |
|---|---|---|
| 10 வருடங்களின் பின் ஒருவரின் 40ஆவது வயதில் | $51,000 | $10,500 |
| 15 வருடங்களின் பின் ஒருவரின் 45ஆவது வயதில் | $120,500 | $22,000 |
| 20 வருடங்களின் பின் ஒருவரின் 50ஆவது வயதில் | $166,000 | $41,500 |
| 30 வருடங்களின் பின் ஒருவரின் 60ஆவது வயதில் | $295,500 | $122,000 |
| 35 வருடங்களின் பின் ஒருவரின் 65ஆவது வயதில் | $500,000 | $200,000 |

நீங்கள் விரும்பினால் இக்கால இடைவெளிக்குள் காப்புறுதித் திட்டத்தை ஒரு முடிவுக்கும் கொண்டு வரலாம்.

இங்கு மேலதிகமாக சிறிதளவு பணம் செலுத்திவிட்டு, விரும்பினால் பின்வரும் அம்சங்களை சேர்த்துவிட்டலாம். அவை பின்வருமாறு:

- கட்டணம் செலுத்தும் இந்த 35 வருட காலத்தினுள் தொழில் செய்ய முடியாத அளவுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்ற காப்புறுதி (waiver of disability premium)
- செய்யும் தொழிலை இழந்தால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்ற காப்புறுதி (waiver of premium for lost employment)
- ஆபத்தான நோய்களுக்கான காப்புறுதி (critical illness insurance)
- மாற்றியமைக்கக்கூடிய காலத்திற்கான மேலதிக காப்புறுதி கட்டணம் (convertible term insurance coverage)



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**Arul Shanthy Canagasuriam (OCT)**
**Junior, Intermediate & Senior Teacher**
**Tutorials for K-8 All Subjects, Gr. 11 & 12 Biology & Chemistry, Gr.9 &10 Math & Science, I.B. Program, A.P. Program,Gifted Program, Special Needs Program, 1st & 2nd Year University Science Subjects.**
**shanthy29@hotmail.com**
**Contact : 647.727.2138 / 647.342.2859**



**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# ஐங்கலை வெண்பா

## இசை

சங்கீதம் தன்னைத் தனியாக எந்தனுக்குப்
பங்கமின்றிச் சின்னாள் படிப்பித்த - தங்க
நடேசன் ஆசிரிய நல்லார்க்கு நன்றிக்
கடன்செலுத்து கின்றேன் கசிந்து. (9)

(பங்கமின்றி - குறையேதும் இன்றி.
சின்னாள் - சில நாட்கள்.)

ஈர்த்து மனந்தன்னை எல்லையில்லா இன்பத்தை
வார்த்துப் பழம்பால்தேன் வானமுதம் - சேர்த்து
விருந்துச் சுவையூட்டி மேனகைபோல் பக்கம்
இருந்துதான் கொஞ்சும் இசை. (10)

(மேனகை - தேவலோக அழகி, நடனமாது,
சகுந்தலையின் தாய்.)

மனக்கவலை நோயுடலம் வாட்டும் வறுமை
இனக்கவலைக் கெல்லாம் இசையே - தனக்குவமை
இல்லா மருந்தாம் இசைவாணர் எல்லோரும்
சொல்வார் இதையே துணிந்து. (11)

புல்லும் புழுவும் மரஞ்செடியும் புள்ளினமும்
கல்லும் மணலும் கடலுயிரும் - நல்லிசையால்
கட்டுண்(டு) அமையும் கசிந்து களித்தாடும்
மட்டில் அளவிசையின் மாண்பு. (12)

(மட்டில் அளவிசையின் மாண்பு - மட்டு இல் அளவு இசையின் மாண்புளு மட்டு இல் - அளவு இல்லாதது. மாண்பு - சிறப்பு. இசையின் சிறப்பு அளவிட முடியாதது.)

கல்லாதார் ஆயிடினும் கன்னலிசைக்(கு) ஆளாகார்
பொல்லாதார் என்றே புரிந்தவரை - மெல்ல
விலகி நடந்திடுதல் நன்றென்றே மேன்மைக்
கலைவாணர் கண்டுரைத்தார் காண். (13)

(கல்லாதார் - இசையைக் கல்லாதார்.
கன்னல் - இனிமை. புரிந்தவரை - புரிந்து அவரை)

சாதி மதபேதம் தாண்டிநிற்கும் சங்கீதம்
வாதம் பிடிவாதம் வஞ்சகம்பொய் - சூதுகளின்
சூழ்ச்சிக் கொடுமைகளைத் தூயஇசை வென்றுலகை
ஆட்சி செலுத்தும் அறி. (14)

இசைக்கெல்லை இல்லை மொழித்தடையும் இல்லை
பசிக்கின்ற மாடும் புசியா(து) - இசைகேட்கும்
பாம்பும் மகிழ்ந்தாடும் பண்கேட்(டு) உயர்ந்துய்யும்
சாம்பும் பயிரும் தளிர்த்து. (15)

(பண் - இசை. சாம்புதல் - வாடுதல்.)

குரலில்லா தார்க்கு விரலென்று சொல்வார்
குரல்நல் விரல்களுடன் கூடி - வருமிசையால்
வையத்தின் வாழ்வன்றி வானவர்தம் வல்லமையும்
உய்யுமென்பர் உண்மையுணர்ந் தோர். (16)



**கவிஞர் வி. கந்தவனம்**

# இந்தியாவில் பணக்காரர்களின் எண்ணிக்கை உயர்வு!

இந்தியாவில் 2018ஆம் ஆண்டிற்குள் மில்லியனர்களின் எண்ணிக்கை 4.37 இலட்சமாக உயரும், 2023ஆம் ஆண்டில் அதன் அளவு இரட்டிப்பாக அதிகரிக்கும் எனப் பன்னாட்டு நிறுவனம் செய்த ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கிறது. நாட்டின் வேகமான பொருளாதார வளர்ச்சியில் பெரும் பணக்காரர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என இந்த ஆய்வுகள் தெரிவிக்கிறது.

உலக நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சொத்துக்கள் குறித்த ஆய்வுகளைச் செய்து வரும் வெல்த் எக்ஸ் நிறுவனம் தான் இத்தகைய ஆய்வை நடத்தியது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இந்தியாவில் மில்லியன் டொலர் சொத்துகள் உடைய பணக்காரர்கள் எண்ணிக்கை 196,000இல் இருந்து 250,000 அளவு உயர்ந்துள்ளது. இது சுமார் 27 சதவீதம் அதிகமாகும். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா, சீனா மற்றும் தென்ஆபிரிக்காவில் பணக்காரர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயரும் எனவும் இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கிறது.



2013-14இல் அதிக பணக்காரர்களை கொண்ட உலக நாடுகளின் பட்டியலில் இந்தியா 14வது இடத்தில் இருந்தது. தற்போது அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஐரோப்பா ஆகிய நாடுகளுடன் போட்டி போடும் அளவிற்கு இந்தியாவின் வளம் உயர்ந்து வருகிறது.

உலக வங்கியின் புள்ளிவிபர அறிக்கையின்படி இந்தியாவின் தனிநபர்களின் வருமானமும் சமீப காலமாக உயர்ந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதேசமயம் இந்தியாவின் பெரும்பாலான கிராமங்களில் வாழும் 74.5 சதவீதம் மக்களின் மாத வருமானம் இன்னமும் ரூ.5000க்கும் குறைவாகவே உள்ளது எனவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பணக்காரர்களின் எண்ணிக்கை உயரும் போது ஆடம்பர பொருட்களின் விற்பனையும் அதிகரிக்கும். இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது, கல்வி அறிவு இருப்பது, தொழில்முனைவு அதிகமாக இருப்பது ஆகியவை ஒரு நாட்டில் பணக்காரர்களின் எண்ணிக்கை உயர முக்கிய காரணமாகும்.



## இணுவில் திருவூர் ஒன்றியம்--கனடா
## தமிழ்மொழித் திறமைகாண் மற்றும் பண்ணிசைப்போட்டிகள்--2015

தொடர்ந்து 15 ஆண்டுகளாக நாம் நடத்தும் மேற்படி போட்டிகளின் முடிவுகள்--2015 பங்கு பற்றிய மாணவர்களுக்கு இணுவில் ஒன்றுகூடலில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பண்ணிசைப்போட்டிகள் 2015 6 வயதுக்குட்பட்டோர்

| இடம் | ஆண்கள் பெயர் | பெண்கள் பெயர் |
|---|---|---|
| 1 | கீர்த்திகன் யோகேஸ்வரன் | சாதனா பிரேமானந்த் |
| 2 | சாய்சந்தோஸ் சத்தியநாதன் | அபிநயா விநோதன் & சாய்லக்ஸ்மி சத்தியநாதன் |
| 3 | மதுரன் செந்தில்வேல்நாதன் | அவ்வை விஜயதாஸ் |

வயது (7 - 9)

| | | |
|---|---|---|
| 1 | சதுர்சன் பரங்குன்றன் | சகானா பிரேமானந்த் |
| 2 | சாய்சரண் சத்தியநாதன் & அபூர்வன் கணேசதாசன் | மித்திரா சேந்தன் |
| 3 | வேணன் குகராஜன் & கரிகரன் கந்தவேள் | சகானா பிரேமானந்த் & மாதங்கி தவராஜா |

வயது (10 - 12)

| | | |
|---|---|---|
| 1 | திருநீறன் சிறீபதிபாலமுரளீதரன் | அஞ்சனா தர்சன் |
| 2 | திவ்வியன் சதீஸ்ஆனந்த் & ஜெயகபிசன் யதுநந்தன் | பவித்திரா சேந்தன் |
| 3 | விபூசன் மகேஸ்வரன் | அமிர்தா பாஸ்கரன் & இலக்கியா பகீரதன் |

வயது 13 - 17

| | | |
|---|---|---|
| 1 | ஆரூரன் சிவலோகநாதன் | தரணியா சதீஸ்ஆனந்த் |
| 2 | அருண் விஜயதாஸ் | சயந்தா பாஸ்கரன் & விதுனா மகேஸ்வரன் |
| 3 | நரேன் செந்தில்வேல்நாதன் & அன்பு விஜயதாஸ் | பிருந்தா பாஸ்கரன் |

எழுத்துப்போட்டிகள் 2015 6 வயதுக்குட்பட்டோர்

| | | |
|---|---|---|
| 1 | சாய்சந்தோஸ் சத்தியநாதன் | அவ்வை விஜயதாஸ் |
| 2 | கீர்த்திகன் யோகேஸ்வரன் | சாதனா பிரேமானந்த் |
| 3 | மதுரன் செந்தில்வேல்நாதன் | |

வயது 7--9

| | | |
|---|---|---|
| 1 | ஆர்வலன் கணேசதாசன் | மாதங்கி தவராஜா |
| 2 | சாய்சரண் சத்தியநாதன் | மித்திரா சேந்தன் |
| 3 | வேணன் குகராஜன் & அபூர்வன் கணேசதாசன் | சகானா பிரேமானந்த் |

வயது (10-----12)

| | | |
|---|---|---|
| 1 | மாதுளன் பிரபாகரன் & விபூசன் மகேஸ்வரன் | மீரா தவராஜா |
| 2 | திருநீறன் சிறிபதிபாலமுரளீதரன் | மதுசியா கோப்பெருந்தேவன் |
| 3 | | மிதுரா தவராஜா |

வயது (13—17)

| | | |
|---|---|---|
| 1 | அருண் விஜயதாஸ் & ஆரூரன் சிவலோகநாதன் | பிருந்தா பாஸ்கரன் |
| 2 | கௌசிகன் யோகேஸ்வரன் & அன்பு விஜயதாஸ் | விதுனா மகேஸ்வரன் |
| 3 | நரேன் செந்தில்வேல்நாதன் | சயந்தா பாஸ்கரன் & மாதுளா பிரபாகரன் |

வாசிப்புப்போட்டிகள் 2015 (6 வயதுக்குட்பட்டோர்)

| | | |
|---|---|---|
| 1 | கீர்த்திகன் யோகேஸ்வரன் | சாதனா பிரேமானந்த் |
| 2 | மதுரன் செந்தில்வேல்நாதன் | அவ்வை விஜயதாஸ் & பிரவீணா இராமதாஸ் |

வயது(7----9)

| | | |
|---|---|---|
| 1 | ஆர்வலன் கணேசதாசன் & கரிகரன் கந்தவேள் | மாதங்கி தவராஜா |
| 2 | வேணன் குகராஜன் | மித்திரா சேந்தன் |
| 3 | சாய்சரன் சத்தியநாதன் & மதுமிதன் கோப்பெருந்தேவன் | சகானா சிவகுமாரன் & தரணிகா சதீஸ்ஆனந்த் |

வயது (10---12)

| | | |
|---|---|---|
| 1 | திருநீறன் சிறீபதிபாலமுரீதரன் | பவித்திரா சேந்தன் & அமிர்தா பாஸ்கரன் |
| 2 | விபூசன் மகேஸ்வரன் | மதுசியா கோப்பெருந்தேவன் & இலக்கியா பகீரதன் |
| 3 | மாதுளன் பிரபாகரன் | மீரா தவராஜா & மிதுரா தவராஜா |

வயது (13----17)

| | | |
|---|---|---|
| 1 | ஆரூரன் சிவலோகநாதன் | சயந்தா பாஸ்கரன் & பிருந்தா பாஸ்கரன் |
| 2 | அன்பு விஜயதாஸ் & அருண் விஜயதாஸ் | அனோஜா தவராஜா |
| 3 | நரேன் செந்தில்வேல்நாதன் | விதுனா மகேஸ்வரன் |

பேச்சுப்போட்டிகள்---2015 (6 வயதுக்குட்பட்டோர்)

| | | |
|---|---|---|
| 1 | மதுரன் செந்தில்வேல்நாதன் | சாதனா பிரேமானந்த் |
| 2 | சாய்சந்தோஸ் சத்தியநாதன் | அவ்வை விஜயதாஸ் |
| 3 | கீர்த்திகன் யோகேஸ்வரன் | சாய்லட்சுமி சத்தியநாதன் |

வயது (7--9)

| | | |
|---|---|---|
| 1 | கரிகரன் கந்தவேள் | சகானா பிரேமானந்த் |
| 2 | வேணன் குகராஜன் | மித்திரா சேந்தன் |
| 3 | தீரன் குகராஜன் | மாதங்கி தவராஜா & தரணிகா சதீஸ்ஆனந்த் |

வயது (10----12)

| | | |
|---|---|---|
| 1 | விபூசன் மகேஸ்வரன் | பவித்திரா சேந்தன் |
| 2 | | மீரா தவராஜா & இலக்கியா பகீரதன் |
| 3 | | அமிர்தா பாஸ்கரன் |

வயது (13 -----17)

| | | |
|---|---|---|
| 1 | நரேன் செந்தில்வேல்நாதன் | சயந்தா பாஸ்கரன் & பிருந்தா பாஸ்கரன் |
| 2 | ஆரூரன் சிவலோகநாதன் | பிரியங்கா சுபாகரன் |
| 3 | அருண் விஜயதாஸ் | விதுனா மகேஸ்வரன் |


## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
### கனடா வாழ் இணுவில் மக்களின் 16ஆவது ஆண்டு வருடாந்த ஒன்றுகூடல்

காலம் -19-07-2015 (ஞாயிற்றுக்கிழமை) நேரம் - காலை 11 மணிக்கு
இடம் - மில்லிக்கன் பூங்காஇ பிரிவு – C (மக்கோவன் / ஸ்ரீல்ஸ்) ஸ்காபுரோ

விளையாட்டுப்போட்டிகளும் களிப்பூட்டும் பல நிகழ்வுகளோடு பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும் இணுவில் மக்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு **416.496.9071, 416.430.0422, 647.885.7407**


## மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசைமூச்சு அடங்கிவிட்டது! - கவிஞர் வைரமுத்து



மெல்லிசை மன்னரின் இசைமூச்சு நின்று விட்டது என்று சொல்வதா? இந்த நூற்றாண்டில் அதிகமாக வாசிக்கப்பட்ட ஆர்மோனியம் அடங்கி விட்டது என்று சொல்வதா? ஒரு பாட்டுச் சக்கரவர்த்தி மறைந்து விட்டார் என்று சொல்வதா? எங்கள் பால்ய வயதின் மீது பால்மழை பொழிந்த மேகம் கடந்து விட்டது என்று சொல்வதா? தமிழ்த் திரையிசைக்குப் பொற்காலம் தந்தவரே! போய்விட்டீரா என்று புலம்புகிறேன் என்றார் கவிஞர் வைரமுத்து

அரை நூற்றாண்டு காலமாய்த் தமிழர்களைத் தாலாட்டித் தூங்கவைத்த கலைஞன் இன்று இறுதியாக உறங்கி விட்டார். அவரது இசை இன்பத்துக்கு விருந்தானது. துன்பத்துக்கு மருந்தானது. அவரது இசை தமிழின் ஒரு வார்த்தையைக் கூட உரசியதில்லை. எம்.ஜி.ஆர் - சிவாஜி என்ற இருபெரும் பிம்பங்களைக் கட்டியெழுப்பிய இசைச் சிற்பி. திராவிட இயக்க அரசியலைக் கட்டியெழுப்புவதற்கும் அவரது பாட்டு பயன்பட்டிருக்கிறது. தமிழர்களின் வாழ்வின் எல்லாச் சம்பவத்திலும் அவர் பாடல் புழங்காத இடமில்லை. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை எங்கள் வாழ்வோடு நடந்து வரும் பாடல்கள் மெல்லிசை மன்னர் படைத்தவை. ஒரு நகைக் கலைஞன் ஆபரணம் செய்வதற்காக சுத்தத் தங்கத்தில் கொஞ்சம் செம்பு கலப்பது மாதிரி கர்நாடக இசையில் மேற்கத்திய இசையைப் பொருத்தமாய்க் கலந்து புதுமை செய்தவர். அவர் தொடாத ராகமில்லை. தொட்டுத் தொடங்காத பாடலில்லை.


கடந்தவாரம் மருத்துவமனையில் அவரது கடைசிப் படுக்கையில் மெல்லிசை மன்னரைச் சந்தித்தேன். அவரது வலதுகை விரல்களை வருடிக்கொண்டே இந்த விரல்கள்தானே ஆர்மோனியத்திலிருந்து அமிர்தம் பொழிந்த விரல்கள் - காற்று மண்டலத்தையே கட்டியாண்ட விரல்கள் - நீங்கள் தொட்ட உயரத்தை யாரும் தொடமுடியாது. பல தலைமுறைகளுக்கு நீங்கள் நினைக்கப்படுவீர்கள் என்று உரத்த குரலில் சொன்னேன். அவரது ஒரு கண்ணின் ஓரத்தில் ஒரு கண்ணீர் முத்து திரண்டு விழுந்து உடைந்தது. அதுதான் அவரை நான் கடைசியாய்ப் பார்த்தது.

பதி பக்தி - மகாதேவி - பாசமலர் - பாலும் பழமும் - பாவமன்னிப்பு - கர்ணன் - ஆயிரத்தில் ஒருவன் - ஆனந்த ஜோதி - சந்திரோதயம் - உலகம் சுற்றும் வாலிபன் - அபூர்வ ராகங்கள் என்று பலநூறு படங்களின் பாடல்கள் காலமெல்லாம் அவர் பெருமை பேசும். அவர் இசையமைத்த "நீராருங் கடலுடுத்த" என்ற தமிழ்த்தாய் வாழ்த்து அவர் புகழைத் தாங்கிப் பிடிக்கும். "விடைகொடு எங்கள் நாடே கடல் வாசல் தெளிக்கும் வீடே" - என்ற பாடல்தான் நான் எழுதிக் கடைசியாய் அவர் பாடிய பாடல். ஒரு சகாப்தத்திற்கு எப்படி விடை கொடுப்பது? நெஞ்சு விம்முகிறது. காற்றுள்ள வரையில் அவர் கானங்கள் வாழும். "வீடுவரை உறவு வீதிவரை மனைவி காடுவரை பிள்ளை கடைசிவரை எம்.எஸ்.வி"

அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கும் உலகம் முழுவதும் உள்ள அவரது ரசிகர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் கவிஞர் வைரமுத்து


### புஸ்பராணியின் "அகாலம்" ஜீவ முரளியின் "லெனின் சின்னத்தம்பி" ஆகிய இரண்டு நூல்களின் அறிமுகமும் விமர்சனமும்

காலம் - 19. 07. 2015 மாலை 4.00 மணிக்கு
இடம் - Show Map, Don Montgomery Recreational Center
2467 Eglinton Ave E, Toronto, ON M1K 2R1, Toronto, ON



கனடா அனைவரையும் தோழமையுடன் அழைக்கிறோம்

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் UFO's & Aliens

## (சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

# றொஸ்வெல் விவகாரம்

றொஸ்வெலில் அந்நியர்களின் அபூர்வவிமானம் விபத்துக்குள்ளாகி விழுந்ததா? அங்கே ஏலியன்களின் இறந்த உடல்கள் எடுக்கப்பட்டனவா? சில ஏலியன்கள் அமெரிக்க இராணுவத்தினரிடம் அகப் பட்டுக் கொண்டனரா? அப்படியாயின், அதன் விளைவுகள்தான் என்ன? என்பது போன்ற பல கேள்விகளுக்கு உத்தேச மான, ஆனால் பொருத்தமான பதில்கனை ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பொருத்த மானதாக இப்போது காணப்படும் அந்த விபரங்களை நோக்கித்தான் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம். அவற்றில் ஒரு கூறாக இருப்பதுதான் அமெரிக்கர் களின் அப்பொலோ பயண வெற்றிகள் என்கிறார்கள். சென்ற தடவையில் றொஸ்வெல் வாசிகளின் கிட்டத்தட்ட உறுதியான முடிவுகளைப் பார்த்தோம். அதிலிருந்து இன்று தொடர்வோம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

றொஸ்வெல் பகுதியிற்கு விழுந்தடித்துக் கொண்டு வந்த யூஎவ்ஓலோயிஸ்ற்களால் முதலில் ஒன்றுமே அறிய முடியவில்லை. அவர்கள் றொஸ்வெலுக்கு வந்து சேர்ந்த வேளையில் எல்லாமே மிகத் துப்பரவாக இருந்தது. 24 மணித்தியாலங்களுக்குள் அமெரிக்க இராணுவம் எல்லாவற்றையும் கச்சிதமாய்த் துப்பரவாக்கி முடித்திருந்தது. ஆனால் ஏலியன் ஆய்வாளர்கள் தமது முயற்சியைக் கைவிடவில்லை. தொடர்ச்சி யான தேடுதல்கள், இரகசியச் சந்திப்புக் கள் என்பன அவர்களுக்குத் தக்க பலனை அளித்தன. ஏனெனில் பரபரப்பும் ஆச்சரியமும் கொண்டவர்களின் வாயை இராணுவத்தினரால் முற்றாகவே மூட முடியவில்லை. தங்களது பெயர்களைக் கூறக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் பலர் தத்தமது கருத்துக்களையும், தாம் கண்டவற்றையும் யூஎவ்ஓ ஆய்வாளர் களுக்கு மெதுமெதுவாகக் கூறத் தொடங்கினர். ஒருசிலர் வெளிப்படையாக வும் சில விடயங்களைத் துணிச்சலாகக் கொடுத்திருந்தார்கள். (இதன் காரணமாக இவர்கள் அமெரிக்க இராணுவத்தினரால் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் கூறுகின்றார் கள்.) சில இராணுவ அதிகாரிகள் கூட, இரகசியங்களை தம்முள்ளேயே வைத்துக் கொள்ள முடியாமல், யூஎவ்ஓலோயிஸ் களிடம் கக்கி விட்டார்கள். அவற்றின் சாரத்தினை இனிப் பார்ப்போம்.

றொஸ்வெலில் அன்று நடந்தது காலநிலை அறியும் பலூனின் விபத்தல்ல. அப்படியான நம்பிக்கையை உண்டாக்கக் கூடிய அறிக்கைகள் எதனையும் இராணுவத்தால் சாதாரண மக்களுக்கு கொடுக்க முடிய வில்லை. மேலும் இவ்விவகாரம் குறித்து செய்த தேடுதல்கள், ஆய்வுகள், பொறுக்கி எடுக்கப்பட்ட பொருட்கள் பற்றிய விபரங்களை எல்லாம் தெளிவாக Blue File என்ற கோப்பினுள் வைத்து விபரங்களை மறைத்து விட்டார்கள். இந்த புளூ பைல் 2000மாம் ஆண்டில், சிற்சில திருத்தங்களு டனும், சிலபல மறைப்புக்களுடனும் வெளி வந்தது. ஆனாலும் அதில் இருந்த விபரங்கள் றொஸ்வெலில் அன்று நடந்த விபத்து ஒரு காலநிலை அறியும் பலூனின் விபத்தெனத் தெளிவுபடுத்தத் தவறி யிருந்தன. அல்லாமலும் அது அந்நியர் களின் அபூர்வ விமானமொன்றின் விபத்துத் தான் என ஏன் இருக்கக் கூடாது என்ற ஐயத்தினை அதிகப்படுத்துவதாகவே இருந்தது.

சரி, அந்நியர்களின் அபூர்வ விமானங்களில் ஒன்றின் விபத்துத்தான் எனில் அதன் பின்னராக என்ன நடந்தது? என்ற கேள்வி எழ, அதற்கு வந்த பதில்தான் எம்மை யெல்லாம் பிரமிக்க வைக்கிறது. அங்கு பெறப்பட்ட ஊகங்கள் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியவையாகத்தான் இருக்கின்றன. றொஸ்வெலில் 24 மணித்தியாலங்களுக் குள் நடைபெற்ற துப்பரவாக்கலில் பெறப்பட்ட பொருட்கள் எல்லாம் அமெரிக்க அரசினரின் இரகசிய பாதுகாப்பான இடமான ஏரியா 51 என்ற பகுதிக்கு உடனடியாகவே எடுத்துச் செல்லப்பட்டன. ஏலியன்களின் உடைந்த விமானத்தின் பகுதிகள், எல்லாமே அங்கு எடுத்துச் செல்லப்பட்டன. இன்னமும் ஏலியன்களின் இறந்த உடல்கள், படுகாயத்திற்குள்ளான ஏலியன்கள், தப்பிப் பிழைத்திருந்த ஒன்றிரண்டு ஏலியன்கள் என்பவையும் ஏரியா 51க்கு இரவோடிரவாகக் கடத்தப் பட்டன. இந்த நடவடிக்கையைப் பார்த்தால், இது ஓர் இராணுவ நடவடிக்கை போல இருந்தாலும், இந்நடவடிக்கையில் இருந்த இரகசியத் தன்மையும் அவசரச் செயற்பாடும் ஆய்வாளர்களை அதிக கவனத்துக்குள் இழுத்துக் கொண்டது. தொடர்வதற்கு முன்னராக ஏரியா 51 பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

ஏரியா 51 என்று ஒன்று தன்னிடம் இல்லவே இல்லையென்று முதலில் அமெரிக்க அரசாங்கமும் இராணுவமும் வன்மையாக மறுத்து வந்தன. ஆனால்



மிகவும் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேணப்பட்டு வந்த இடத்தை ஆய்வாளர்கள் எப்படியோ கண்டுபிடித்து அது இருக்கின்ற சரியான இடத்தைக் கூறியபோது ஒருவரா லும் மறுக்க முடியவில்லை. ஆனால் அது பற்றி ஒன்றுமே கூறாது மௌனமாக இருந்து விட்டார்கள். இன்று இணையத்தின் வலைப் பின்னலிலும் ஏரியா 51 ஐக் காணக் கூடியதாக உள்ளது. இத்தடுக்கப் பட்ட இப்பிரதேசத்தின் வெளியே நின்று அங்கு நடைபெறுகின்ற நடவடிக்கைகளை அறிய இன்றும் பலர் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றார்கள். சுற்றிலும் மலைப்பாங்கான இடத்தின் நடுவில் ஏரியா 51 அமைக்கப்பட்டு இருப்பதனால் உள்ளே என்ன நடக்கிறது என்பதனை அறியவோ அல்லது இலகுவில் ஊகிக்கவோ ஒருவராலும் முடியவில்லை. ஆனால் இரவுகளில், வெளிச்சமாய் வானில் இருந்து வித்தியாசமான விமானங்கள் வந்திறங்கு வதை இந்த ஆய்வாளர்கள் கண்டு கொண்டிருக்கின்றார்கள். இவ்விமானங் களில் சில வேற்றுக்கிரகவாசிகளின் விமானங்களாகக் கூட இருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

சரி, ஏலியன் விமானத்தின் உடைந்த பகுதிகளும், ஏலியன்களும் ஏரியா 51இன் உள்ளே கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை எவ்விதம் நம்புவது என்ற கேள்விக்கு உருப்படியான பதில்களை ஆய்வாளர்கள் தருகிறார்கள். றொஸ்வெலில் விபத்து நடந்த ஒன்றிரண்டு நாட்களில் அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் நின்றும் பல துறைகளைச் சார்ந்த நிபுணர்களும் ஏரியா 51க்கு அவசர அவசரமாக மற்றவர்களுக்குத் தெரியாமலே அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள், அரசாங்கத்தின் அவசர நிலைமைக்கு உட்பட்டதாக. ஊடற்கூற்று நிபுணர்கள், அறுவை சிகிச்சைப் பிரபலங்கள், மிகச் சிறந்த தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோர் அவர்களில் அடங்குவர். சிலர் அங்கே சிலநாட்களும், சிலர் சில மாதங்களும், இன்னமும் சிலர் வருடக் கணக்காகவும் ஏரியா 51இன் உள்ளே இருக்க வேண்டி வந்து விட்டது. இப்படி யான இயல்பற்ற நிலமைகள், அப்படியாகத் தங்கியவர்களின் குடும்பங்களை சஞ்சலத்துக்குள்ளாக்கியது. திடீரென மாயமாக மறைந்தவர்கள் போன்ற கதிக்குள்ளானவர்களைத் தேடும் முயற்சியில் சில விபரங்கள் வெளிவந்தன. அவை ஏலியன் ஆய்வாளர்களைப் போய் சேர, இவர்கள் எல்லோருக்கும் என்ன நடந்தது என்ற கேள்வி எழுந்து, பல சிக்கல்களைத் தீர்க்கக் கூடியதாக இருந்தது.

திடீரென மறைந்தவர்கள் சில நாட்களின் பின்னர், சில காலங்களின் பின்னர் தத்தமது இடங்களுக்கு, எப்படி இரகசி யமாக மறைந்தார்களோ, அவ்வண்ணமே இரகசியமாகத் திரும்பி வந்தார்கள். திரும்ப வந்தவர்கள், முதலில் எதுவுமே நடக்காதது போலக் காட்டிக் கொண்டாலும் உறவினர்கள் நண்பர்களின் நச்சரிப்பு களைத் தாங்க முடியாது. அரச கருமமாக அழைக்கப்பட்டிருந்தோம் என்று மட்டும்


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 26ஆம் பக்கம்

**_Personal Prayer To The Holy Spirit_**

Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - RV



Our Mother of Perpetual Help

REFINANCE TO LOWER RATES
& SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500 @2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | 4,014.20 | 1,524.55 |

MONTHLY SAVING
$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca





Ajax | Markham | Scarborough

நடன வகுப்புகள் ஆரம்பம்

Bharathanatyam
Bollywood
Gaana

irudaya DANCE COMPANY

ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"

நிவேதா மூத்ததம்பி
கீர்த்தனா அருளானந்தராஜா

- அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசு சின்னராசா)
- அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் (Canada Campus)
- நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
- மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்



மேலதிக தொடர்புகளுக்கு:
(647)967-1994 (416)319-0164


# முகத்தில் கரும்புள்ளிகள் மறைய



மூக்கின் மேலுள்ள கரும்புள்ளிகளுக்கு நல்ல வைத்தியம், முகத்தை ஸ்ரீம் செய்வது தான். ஓர் அகன்ற பாத்திரத்தில் வெந்நீரை வைத்துக் குனிந்து, அந்த நீராவி முகத்தில் படும்படி செய்தால், கரும்புள்ளிகள் உள்ள துவாரங்கள் விரிவாகும். ஒரு பூத்துவாலையால் அதன் மீது சுழற்றித் தேய்ப்பதன் மூலம், உள்ளே இருக்கும் கருமுளைகள் வெளியே வந்துவிடும். பிறகு குளிர்ந்த தண்ணீரால் முகத்தைக் கழுவி விட்டுச் சந்தனத்தை அரைத்துப் பூசவும். எண்ணெப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். அம்மை வார்த்த பின்பு ஏற்படும் தழும்புகளுக்கு சோறு வடித்த கஞ்சியை முகத்தில் பூசி வரவும். அல்லது வெண்ணெயும், கஸ்தூரி மஞ்சள் தூளும் கலந்த கலவையைத் தினமும் பூசி வரவும். வேப்பிலையை மஞ்சளுடன் அரைத்துப் பூசி வரவும். வேப்பிலையை மஞ்சளுடன் அரைத்துப் பூசிக் குளித்தால், 2-3 மாதங்களில் மறைந்து விடும்.



கோடையில் ஓர் வசந்தம்
AUGUST 8 & 9, 2015
1 St South Asian Indoor Mall
in North America
OPEN 7 DAYS A WEEK
Finch and Middlefield
5215 Finch Ave
Scarborough, ON
m1s 0c2
GTA
SQUARE
GTA SQUARE இன்
8 வது கோடைக்கால வசந்தம்

# JRS AUTO TECH

OPEN 24 HOURS
7 DAYS A WEEK

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.



For the very first time a Tamil Street Festival outside of Asia!
ஆசியாவுக்கு வெளியே முதன்முறையாக ஓர் தமிழ்த் தெருவிழா!
Lebara's
Tamil Fest
தெரு விழா
Powered by IDEAL DEVELOPMENTS
மரபுக் கலைகள் – தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை, பறை இசை
இளையோர் மற்றும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்
சுவைமிகு தமிழர் உணவுகள் மற்றும் ஆடைகள்
இசை ஆடல் மற்றும் நகைச்சுவை விருந்து
கனடியத் தமிழர் வரலாற்றுக் காட்சிக்கூடம்
AUGUST 29 & 30
Morningside Ave Between Finch & Neilson
நுழைவுக்குக் கட்டணம் இல்லை
Free Admission
குறிப்பிட்ட சாவடிகளே உள்ளதால் தங்கள் வர்த்தக மற்றும் உணவுச் சாவடிகளைப் பதிவு செய்ய முந்துங்கள்
யூலை 20ஆம் நாளுக்கு முன்னர் பதிவு செய்வதன் மூலம் சிறப்புச் சலுகைகளைப் பெறுங்கள்
அழையுங்கள் 416.240.0078
இவ்வாண்டின் மிகப் பெரிய தமிழர் விழாவின் பங்காளராகுங்கள்
Zone Sponsors
HONDA Formula Honda Where You're Treated like Family.
747 AUTOPARTS The Right Price; The Right Choice www.747autoparts.com
Aalayaa THE MAGIC OF
BonaFide Mortgage
GALAN Gary Anandasangaree & Associates Professional Corporation
SUTHAHOMES
Media Sponsors
ATN
metrolandmedia toronto Connected to your community
geniemedia
#tamilfestTO @tamilfestTO #tamilfestTO
Proudly Hosted by Canadian Tamil Congress
TamilFest.ca
info@canadiantamilcongress.ca

# முதுகுவலி: குணங்குறிகளும் சில சிகிச்சைகளும்

உடலின் பின்புறமாக இருக்கும் முதுகுப் பகுதியை கண்ணாடி இல்லாமல் எம்மால் பார்க்க முடியாது. இது எமது முதுகுப் பகுதியில் முகுது எலும்பு (Spine) தடித்த தோல், பரந்து விரிந்த தசைகள், நீண்ட தசைநாண்கள் (Ligaments). பலதரப்பட்ட எலும்புகள், மூளைத்தண்டுவட நரம்புகள் (Spinal cord nerves) என பலவகை உறுப்புகள் சேர்ந்த ஒரு கூட்டுக்குடும்பம் போன்று அமைந்துள்ளது. கழுத்து, தோள்பட்டை எலும்பு, மேல்முதுகு, மத்திய முதுகு, கீழ்முதுகு, இடுப்பு, உட்காரும் பகுதி என பல பகுதிகளைக் கொண்டுள்ளது.

பார்ப்பதற்கு செவ்வக பலகைபோல் அமைந்துள்ள முகுது அமைப்பிற்கு அச்சாணிபோல இருப்பது தண்டெலும்பு பகுதி (Vertebral Column) ஆகும். இதனை பின்னால் இருந்து பார்த்தால் ஒரு செங்கோல் போல தெரியும். ஆனால் உண்மையில் சற்று வளைந்தே காணப்படும். முதுகின் அசைவுகளுக்கு முதுகெலும்பு துணையாக உள்ளது. முள்ளந்தண்டு வட நரம்புகளை இது பாதுகாக்கின்றதுடன் உடலுக்கு எடையையும் தருகிறது.

முதுகெலும்பு என்பது ஒரு தனி எலும்பு அல்ல. 33 எலும்புகள் இணைந்த ஒரு எலும்புச் சங்கிலி இதுவாகும். இது தண்டெலும்புகள் (Vertebrae) கொண்ட பிரதான அமைப்பாகும். ஒரு பொறியியலாளன் அமைப்பது போல் நல்லதொரு வடிவமைப்புக் கொண்ட இத்தண்டெலும்புகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளது. எல்லா எலும்புகளையும் 5 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். கழுத்துப்பகுதி (Cervical Spine) என்பது 7 தண்டெலும்புகளை உடையது. இதனை C1-C7 என கூறலாம். இரண்டாவது பிரிவு மேல்முதுகு (Thoracic Spine) எனலாம். இதில் 12 தண்டெலும்புகள் உள. இதனை T1-T12 என கூறலாம். அடுத்துள்ள பிரிவு கீழ்முகுது அல்லது அடிமுதுகு தண்டு (Lumbar Spine) எனப்படும். இதில் 5 தண்டெலும்புகள் உள. இதனை L1-L5 என கூறலாம். அடுத்துள்ள இடுப்பு பகுதி முக்கோணவடிவில் இருக்கும் மூட்டெலும்பு (Sacrum) எனப்படும். இங்கு ஒன்றிணைந்த தண்டெலும்புகள் 5 உள்ளன. இதனை நாரி முதுகெலும்புகள் என்பர். (5 Fused Sacral Vertebrae). இறுதியாக உள்ள உட்காரும் பகுதி coc-cyx எனப்படும். இது ஒரு வால் போன்றது. இங்கு தொடர்ச்சியான தண்டெலும்புகள் (Frequently fused coccygeal vertebrae) உள்ளன. இந்த தண்டெலும்பு வளைவு களுக்கு நடுவில் முதுகுப்பகுதியில் ஒரு துளைவடிவம் (Spinal canal) உளது. இதன் வழியாகத்தான் மூளையிலிருந்து ஆரம்பிக்கும் தண்டு வடமும் (Spinal cord) அதனை சேர்ந்த இரத்த குழாய்களும், நரம்புகளும் இடுப்பு வரை செல்கின்றன. மூளையின் கட்டளைகளை கடத்திச் சென்று அந்தந்தப் பகுதிகளுக்கு ஆணைகளை பிறப்பிப்பது இந்த முள்ளந்தண்டுவட நரம்புகள் தான். இந்த நரம்புகள் 31 சோடிகளாகும். ஒவ்வொரு சோடி நரம்பும் வெளியேறி அந்தந்தப் பகுதிகளுக்கு செல்கின்றன. அதாவது நரம்புகள் வெளியேறும் துவாரம் முள்ளந் தண்டுவடத்திற்கு பின்பாகவும் அசையும் மூட்டுகளுக்கு முன்பாகவும் இருக்கிறது. தசைநார்கள் பின்புறமாக விலகினாலும் அசையும் மூட்டுகளில் பிரச்சினை ஏற்பட்டாலும் இந்த நரம்புகளைத் தான் பாதிக்கும். முள்ளந்தண்டெலும்புவடம் தண்டெலும்புகள் என்பவற்றிற்கு இடையில் குருத்தெலும்பாலான மிருதுவான தட்டு (intervertebral disc) உள்ளது. எந்த அதிர்வுகளையும் இது தாங்கும். இது திரவத்துடன் கூடியது. இவை எல்லாம் சேர்ந்து எமது உடலக்கு பல அற்புதமான நிகழ்வுகளை செய்கின்றன. நாம் ஆடுவது, விளையாடுவது, நீச்சல் செய்வது, வாகனம் செலுத்துவது




எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து அதிர்ச்சி களிலிருந்து எம்மை இது பாதுகாக் கின்றது. மூட்டை சுமப்பவர் கூட முதுகெலும்பை நம்பியே வாழ்க்கையை நடத்துகிறனர்.

கோபம் ஏன் வருகிறது? எப்போது வருகிறது? கோபம் வரும் வேளை அவரது மனம் தெளிவாக இருக்கிறதா? அவரை அறியாமலே திடீரென்று வருகின்றதா? என்றெல்லாம் நாம் கேள்விகள் கேட்டு கோபம் பற்றித் தெளிவாக அறிவது பயன் தரும். பொதுவாக நோக்கும்போது ஒருவரின் விருப்பங்கள் நிறைவேறாது தடங்கல் ஏற்படும்போது கோபம் வருகிறது. உதாரணமாக ஒருவர் தொலைக்காட்சியை மிகவும் ஆர்வமாகப் பார்த்துகொண்டிருக்கின்றார். அப்போது திடீரென்று இன்னொருவர் வந்து வேறொரு அலைவரிசைக்கு மாற்றும்போது கோபம் வருகிறது. ஒருவர் தன் துணிமணிகளை அழகாக அடுக்கி வைக்கின்றார். இன்னொருவர் அதனை குழப்பிவிடும்போது கோபம் வருகிறது.

பொது இடங்களிலோ அல்லது வீட்டிலோ மற்றவர்கள் எதிர்பாராது முறைகேடாக நடக்கும் போது கோபம் வருகிறது. மற்றவர் கோபப்படுகின்றார் என்று நாமும் கோபப்படலாமா? கோபத்தின் அடிவேர் பலவீனம் என்று கூறப்படுகின்றது. ஒருவிடயத்தில் எமக்குத்தெளிவு இல்லாவிட்டால் குழப்பம் ஏற்படும், குழப்பம் ஏற்பட்டால் வார்த்தைகள் தெளிவில்லாமல் வரும் வார்த்தைகள் தெளிவில்லாவிடின் செயல்களும் ஒழுங்காக அமையமாட்டாது. செயல்கள் ஒழுங்காக அமையாவிட்டால் முரண்பாடுகள் உருவாகும். முரண்பாடுகள் கோபத்தைக்கொண்டுவரும். கோபப்படுபவர்கள் மீது நாம் கோபப்படாமல் அவர் செய்த ஒரு நன்மையை நினைத்தால் வந்த கோபம் திரும்பி ஓடிவிடும்.

கோபப்படுபவரை யாரும் தண்டிக்கத்தேவையில்லை. ஏனென்றால் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்த்தாக்கம் உண்டு. நன்மைக்கு நன்மை தீமைக்கு தீமைதான். தினை விதைத்தவன் தினைதானே அறுப்பான்? எனவே எமது கோபத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வோம். நாளும் முயன்று கோபத்தை வெல்வோம்.

- கோபத்தின் தன்மைகளைப்புரிந்து கொள்வோம். ஒருவருக்கு அவரது சுய கட்டுப்பாட்டை மீறியே கோபம் வருகிறது. எனவே இயன்றவரை கோபத்தை மெல்ல மெல்ல குறைக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். கோபத்தை வென்றவர்கள் அமைதியாக மகிழ்ச்சியாக வாழ்வதை கண்கூடாகக்காணலாம்.

**- றஞ்சி கதிர் -**

- சமுதாயத்தில் கோபத்தை வைத்தே ஒருவரின் குணநலங்களைத்தீர்மானிப்பர். இவர் நியாயத்துக்கு மட்டும் கோபப்படுபவர், இவர் எடுத்ததுக்கெல்லாம் கோபப்படுபவர், “கொதியன்”, “முசுறன்” என்றெல்லாம் பேச்சுவழக்கில், கூறுவதை நாம் அறிவோம். இவ்வாறு இனம் காணும் போது அவர்களுக்கு ஏற்ப நாம் நடந்து கொள்ளக்கூடியாதாக இருக்கும். இவ்வாறாக மனிதரை இனம்காணவைக்கும் கோபம் தேவையா?.

கோபத்தால் ஏற்படும் பலாபலன்களை அறிந்து மருந்து போல் அதனைக் கையாளும்போதே நாம் நன்மையைப்பெறுவோம். நெருப்பை நன்மைக்கும் பயன்படுத்தலாம், தீமைக்கும் பயன்படுத்தலாம். அதேபோன்று கோபத்தின் தன்மையை அறிந்து பயன்படுத்தினால் நன்மை பெறலாம். கண்மூடித்தனமான கோபம் ஒருவர் வாழ்கையையே அழித்து விடும். “அக்கினிக்குஞ்சு காட்டையே அழித்து விடுகிறது” என்ற பாரதியாரின் எச்சரிக்கை இவ்விடத்தில் சாலப்பொருத்தம்.

---

**MATH TUTORIAL 303(15/7/2015)**

ANSWERS TO TUTORIAL 302

1)For the 1st nine pages total of 9 digits used .Pages 10 to 99 a total of $2\times 90 = 180$ *digits used* ,therefore 216-(9+180) =27 digits ,this 27 is sufficient to number 9 more pages with 3 digits number .total 108 pages

2)The 1st couple $a_1a_2$ can be seated on the right or left of the bench giving 2 choices .In each position ,there are2 ways each couple can arrange themselves so $2\times 2\times 2$ =8 ways

3)The cross product will be one such vector ,so $(1,3,2)\times(4,-6,7)=(33,1,-18)$ .So vector perpendicular to (1,3,2)and (4 ,-6 ,7) is (33,1,-18)

4)Rewriting the equation $\frac{x-0}{-1}=\frac{y-(-2)}{1}=\frac{z-0}{1}$ then by inspection, a vector eqn .of the line is

$r$=( 0,-2 ,0) +t(-1 ,1 ,1 )

**TUTORIAL 303 QUESTIONS**

**1)**At present the sum of the ages of father and his son is 33 years ,find the smallest number of years until the father's age is 4 times the son's age?(for gr 6-8)

2)Abag contains 6 red &9 green marbles .If we draw 4 marbles(without replacement) what is the probability all of them have the same colour?

3)$\lim_{x>\infty}(2+\frac{\sin x}{x})$

4)$L_1$&$L_2$ are 2 parallel lines in $R^3$ defined by $L_1$:$\frac{X+1}{4}=\frac{Y}{-1}$=Z-3 .$L_2$:$\frac{X-5}{4}=\frac{Y+6}{-7}$=Z-3 (a) The plane A is perpendicular to $L_1$ and contains the point (-1,0,3).Determine the equan. of A in the form ax+by+cz +d=0 (b) Find the coordinates of the point of intersection of A



and $L_2$

By Mr.S.F.Xavier(Teacher) tel6473409490

# பரிசோதனைக்கு எப்போதும் நான் தயார்!

எப்போதும் பரிசோதனைக்கு உட்பட நான் தயாராக இருப்பதனால் நம்பிக்கையின் சக்தியை அனுபவித்து அதை வெளிப்படுத்துகிறேன்.

வாழ்வில் சகலதும் எமக்குச் சரிவர அமைந்து விட்டன என எம்மில் பலர் நினைக்கிறோம். நாம் அறிந்திருக்க வேண்டியவை யாவும் எமக்கு நன்கு தெரிந்த படியால், தேவையானபோது தகவல்களை உடனடியாக ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும் என நினைக்கிறோம். ஆனால் சற்றும் எதிர்பாராத போது ஒரு சவாலை நாம் சந்திக்கும்போது தேவை யான தகவல் ஒன்றுகூட நினைவுக்கு வந்து உதவாமல் எம்மை ஆச்சரியப்படுத்தும்! ஆமாம் எமது மனம் குழம்பிய நிலையில் அந்த நேரத்தில் எமக்குத் தேவையான விவரங்கள் எம் நினைவுக்கு வரவே வராமல் அடம்பிடிக்கும். இத்தகைய அபாயகரமான நிலைகளில் திகிலடைந்து பீதியுடன் பயப்படும்போதுதான் நாம் நம்பிக்கை வைத்திருந்தவை வழக்கமாக சோதனைக்குட்படுத்தப்பட்டு 'சோதனை மேல் சோதனை, போதுமடா சாமி' என எம்மைத் துன்புறுத்துகின்றன. எமக்குத் தெரிந்தவை யாவும் எமக்குச் சரியாகத் தெரிந்திருக்கின்றன என்பது எமக்கு நிச்சயமில்லாவிடின் இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது. சந்தேகத்துட னும் பயத்துடனும் நாம் புதைகுழிக்குள் அகப்பட்டு விடுவோம். எமக்குத் தெரிந்தவை எமக்குச் சரிவரத் தெரிந்து நாம் சொல்வதில் உண்மையான நம்பிக்கை எமக்கு இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவே இவ்வாறு வாழ்வு எம்மைப் பரிசோதித்துப் பார்க்கிறது.

நம்பிக்கை என்ற மைதானத்தில் நீ எந்த இடத்தில் இருக்கிறாய் என்பதை உண்மை யாக அறியவேண்டும் என்றால் கடவுள் தரும் புதிர்களுக்கு உனது பதில் என்ன? உனக்குப் பதில்கள் தெரியும் என்ற நம்பிக்கையுடன் சோதனைக்குப் போவாயா அல்லது உனக்குச் சுகமில்லை எனப் பொய் சொல்லிப் போகாமல் இருப்பாயா? முழுமுயற்சியுடன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் பார்ப்பாயா அல்லது ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்வாயா? பதில் தெரியாவிட்டால், அதை ஒப்புக்கொண்டு உதவி கேட்பாயா அல்லது பதில் தெரியும் என நடித்து உனக்குப் பதில் தெரியாதது வெளிவரும் போது ஆசிரியர் இதை எனக்குக் கற்பிக்கவில்லை எனக் குற்றம் சாட்டுவாயா? உனது வாழ்வில் தலை தூக்கும் இத்தகைய சடுதியான கேள்வி களுக்கு என்ன பதிலளிக்கிறாய் எப்படிச் சமாளிக்கிறாய் என்பது நம்பிக்கை மைதானத்தில் நீ எந்த இடத்தில்



நிற்கிறாய் என்பதைத் தெரிவிக்கும். வாழ்வில் உனக்கு யாவற்றையும் பற்றி சகலதும் தெரியும் என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். வாழ்வின் வியப்பூட்டும் எதிர்பாராத சிறுசிறு நிகழ்வுகள் உனக்குத் தெரியவர வேண்டிய மேலதிக தகவல்களை உனக்குக் கற்பிக்க இன்று அனுமதி கொடு.

**பரிசோதிக்கப்படும்போது பயப்படாது உண்மையான பதில்களைக் கொடுக்க நான் எவ்வளவு ஆயத்தமாக இருக்கிறேன் எனும் விடயத்தை இன்று விசுவாசத்துடன் எதிர்கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 229

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897

லலிதா புரூடி



TBC Toronto Business College

DIPLOMA PROGRAMS

- ACCOUNTING & PAYROLL ADMIN. 35 Weeks
- BUSINESS ADMINISTRATION 26 Weeks
- COMPUTERIZED ACCOUNTING 26 Weeks
- FOOD SERVICE WORKER (FSW) 12 Weeks
- MEDICAL OFFICE ADMIN.(MOA) 32 Weeks
- PERSONAL SUPPORT WORKER(PSW) 26 Weeks

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் DIPLOMA பாடநெறி ஒன்றை இலவசமாகக் கற்கலாம்

Day care & Transportation up to $28000
Tuition Fees, Books, Living Expenses
அனைத்தும் இலவசம்

PART TIME COURSES

Windows, Outlook, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac
Food Handler Certification



PSW

START YOUR CAREER IN JUST SIX MONTHS
Immediate Job Opportunities
Placement In Long Term Care Facilities
NACC Diploma

EDUCATION IS A LIFE LONG JOURNEY

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# 'மாறிய நாட்களும் மாறாத சூரியனும்'

## கலைஞர் 'திவ்வியராஜா' அவர்களின் அநுபவப்பதிவு



பாடகர், வில்லுப்பாட்டாளர், நடிகர், திரைப்பட இயக்குனர், இசைஇறுவட்டு வெளியீட்டாளர் முதலிய பல்திறமைகொண்ட திவ்வியராஜனிடம் எழுத்துக் கலையும் உறங்கிக் கிடந்திருக்கிறது. அந்த உறக்கம் 'மாறிய நாட்களும் மாறாத சூரியனும்' எனும் அநுபவப்பதிவுப் புத்தகத்தின்மூலம் கலைந்துள்ளது. இனிமேல் அவரின் எழுத்துப் பணி தொடரும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்தப்புத்தகம் 'உள்ளதை உள்ளபடியே கூறிய' ஒரு யதார்த்தப் பதிவு. "வெட்டி எடுத்த தசையில் பச்சை இரத்தம் சிந்துகிற மாதிரி எழுத்து முயற்சிகள் இருக்க வேண்டும்" என்று பேறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி கூறியுள்ளார். உண்மையிலே நான் இதை வாசித்து முடித்ததும் எனது துணைவியாரிடம் "இதை உடனடியாக வாசியம்மா" என்று சொல்லிக் கொடுத்தேன். அவரும் விரைந்து வாசித்து முடித்துவிட்டார்.

- கந்தசாமி முத்துராஜா -

புத்தகத்திலுள்ள சில குறிப்புக்களை மட்டும் எடுத்துக்காட்டுக்க இங்கு கூற விரும்புகிறேன். கிழக்கிலங்கையில் திவ்வியராஜனின் தம்பியார் விஷ்ணுநாதன், வயது 25 – நிலஅளவு அரச பணியாளராகக் கடமைசெய்யும் காலத்தில், காணாமல் போகிறார். புத்திர சோகத்தால் திவ்வியராஜனின் தந்தையாரும் இறந்துவிடுகிறார். இதை வாசிக்கும் போது எந்தக் கல்நெஞ்சமும் கரைந்து விடுகிறது.

திவ்வியராஜன் குடும்பம் பலமுறை மயிரிழையில் உயிர் பிழைத்த திகில் நிகழ்வுகள் திகைப்பூற வைக்கின்றன. அவர்கள் தமிழ்நாட்டுக்கு அகதியாக வருவதற்காக வள்ளத்துக்குப் பணம் கட்டியபின் அலைக்கழிக்கப் படுகிறார்கள். அப்போது வள்ளக்காறத் 'தரகர்' ஒருமுறை கூறுகிறார்: "அண்ணையாணை இல்லை அக்காவாணை இல்லை. அது பாஸ் எடுக்கிறதில பிந்திப் போச்சு. இண்டைக்கு எல்லாம் ஒக்கே. இண்டைக்கு இரவைக்கு போட் வருகுது." இத்தகைய யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு உயிரோட்டமாகவே புத்தகத்தில் காணப்படுகிறது.

குண்டுகள் விழுகின்றன, மக்கள் சாகின்றனர், அச்சூழலில் வேலிச்சண்டையும் நடைபெறுகிறது. 1981 - ஆம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக் கல்விக் களஞ்சியமான மத்திய நூலகம் எரியூட்டப்பட்டு ஏறத்தாழ (90,000) தொண்ணூறு ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின. உள்நாட்டுப் போர்க்காலத்தில் பொம்பர்களுக்கும் ஹெலிகளுக்கும் ஒளித்து விளையாடுவதும் ஓர் அலாதியான விளையாட்டுத்தான். "வாறான்... வாறான்... சுத்துறான்...சுத்துறான்...சரியிறான்... இந்தா போடப்போறான்... போடப்போறான்...டோம்... ஐயோ போட்டிட்டான்." பொம்பர்கள் குண்டு போடுவதை இதுபோல் நேரிடை வர்ணனை செய்த சந்தர்ப்பங்கள் பல. இத்தகைய சுவையும் கவலையும்கொண்ட உண்மைச் சம்பவங்கள் புத்தகம் எங்கும் காணப்படுகின்றன.

இந்தியாவின் அகதிமுகாம் வாழ்க்கை. சிறிய சிறிய தென்னங்கீற்றுக் குச்சுக்குடிசைகள். முதல் நாளில் இரசத்தண்ணியுடன் சோறு. சுகாதாரக்கேடு. தொற்றுநோயால் பட்ட சீரழிவு. இவ்வாறான பலவகைச் சோகங்கள், அச்சில் அழியா ஆவணமாகி உள்ளன.

காலஞ்சென்ற மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதியும் உதயன் வார இதழ் இயக்குனர் திரு லோகேந்திரலிங்கமும் திறமையான அணிந்துரைகள் கொடுத்துள்ளனர். விரிவுரையாளர் முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் பின்னட்டை வரைவை யதார்த்தமாகப் பதிந்துள்ளார்.

இத்தகைய புத்தகங்கள் எழுதப்பட வேண்டியது வரலாற்றுக் கடமையாகும். நம்மவர் எல்லோரிடமும் பலவித அநுபவங்கள் உண்டு. அவர்களும் எழுதுவதற்கு முன்வரவேண்டும். அந்தவகையில் திவ்வியராஜனின் முயற்சிக்கு வாழ்த்துக்கள். அறிவுச் செல்வத்தை விரும்புவோர் அவருடன் தொடர்புகொண்டு இந்த அரிய நூலை வாசித்துப் பயன்பெறலாம்.

தொடர்புகளுக்கு:thiviyarajah@yahoo.com, (416) 832-5230


Seelan Siva Real Estate
Buy.Sell.Invest




Direct: 416.999.3555
Uthayan Aiyadurai
Sales Representative
email:aiya14@gmail.com




Direct: 416.451.0271
Seelan Siva Aiyadurai
Real Estate Broker
email: seelansiva@gmail.com
web:www.egtahomes.com


"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

$154,000

Pharmacy/Finch
2 Bedroom 1 washrooms Condominium
Great Location!!!

$129,900


Middlefield/Finch
Unbelievable Price In Gta!!!,
Good for investors or own use of any business

$364,900

Kennedy/401
Tridel Built
Gorgeous 3 Bed, 2 Bath!
Unobstructed View

$269,900

Hwy 427/Rexdale Blvd
2 Bedroom one washroom,
Absolutely Stunning Property
Mansions Of Humberwood

HOMELIFE/GTA Realty Inc.
Brokerage*
5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2
Bus:(416)321-6969
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# ரொறொன்ரோ றொக் அன்ட் றோல் நிறுவனத்தின் இசைப்பாடல் ஒன்று

## கைம்பெண் (Widow)

ஓகஸ்ற் மாதம் 8ஆம் திகதி 2008இல் வெளியான இப்பாடலின் மொழியியலாளர் ரீனா ரேர்ணர் அவர்கள். இங்கிலிஸ் இசைப்பாடல்களுக்கு சொற்கள் சேர்க்கும் வல்லமை பெற்றவர் ரீனா ரேர்ணர் எனும் புகழைத் தட்டிக் கொண்ட இவரே.

மெட்டுக்குப் பாட்டா, பாட்டுக்கு மெட்டா எனும் சர்ச்சை பற்றிய பகுதிகளுக்குள் நுழையும் திறமை எம்மிடம் இல்லை. இது பிறமொழியானதால் இசை நுணுக்கங்களை பகுத்தறியும் ஆற்றலும் குறைவு. ஆயினும் மேலைத்தேச இசையை உணர்ந்து ரசிக்கவும் அதன் மொழிவளத்தை ஆழ்ந்து அனுபவிக்கவும் முடியும்.

ரீனா ரேர்ணரின் மொழிவளம் றொக் அன்ட் றோல் இசைப்பாட்டு நிறுவனத்தில் பேரும்புகழும் பெற்று உலகை வலம் வந்து கொண்டிருக்கிறது.
கைம்பெண் பாடலின் மொழிவளமும் அதன் புதிய அர்த்தமும் பெண்ணியம் பேசும் எம்மிடம் ஒரு சலனத்தை ஏற்படுத்தியது.

சங்கத்தமிழ் பாடல்கள் குறுகிய வரிகளையும் நிறைந்த பொருள் வளத்தையும் தருவது போலவே இப்பாடல் இரு செய்யுள்களை உடையது. ஆனால் இசையோடு பாடும் போது நீண்டநேரம் சொக்க வைக்கின்றது.

ரீனா ரேர்ணர் யாரை கைம்பெண் என்று கூறுகிறார். தமிழ் கலாசாரத்தில் கணவன் இவ்வுலகைவிட்டு மறையும் போது தான் விதவை, கைம்பெண், அறுதலி, வாழ்விழந்தவள், மொட்டைச்சி போன்ற பெயர்களைப் பெற்று சகுனத்துக்கு உதவாதவள் எனும் பட்டத்தையும் பெற்று மூலைக்குள் தள்ளப்படுவாள். இன்று காலமாற்றத்தினால் சமூகத்தில் கலந்து உறைந்தாலும் நற்காரியங்களில் முன்னின்று செயலாற்றுவதில்லை.

ஒரு பெண் விவாகம் முடிந்தவுடன் சுமங்கலி எனும் பெயரைப் பெற்று விடுவாள்.



அதன்பின் கணவன் அவளைப் பிரிந்தாலும் சரி, வேறு பெண்ணுடன் வாழ்ந்தாலும் சரி, வெவ்வேறு காரணங்களால் தூரதேசம் போனாலும் சரி பிரிவுத்துயரோடு வாழ்ந்தாலும் அவள் சுமங்கலியே சுமங்கலிதான்.

பிரிவுத்துயரை இருவரும் பகிர்ந்து கொள்ள தோழன், தோழியர், தூதன் முதலியோர் உதவுவர். அவர்களுடைய தாபம் உயிரற்ற பொருள்கள் மீது ஏற்றியும் புலவர் பாடுவர். மேகம், புறா, தென்றல், நாரை எனவும் உண்டு. சில காட்சிகள் காதலர்களை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். பிடியூட்டிப் பின் உண்ணும் ஆண்யானை (களிறு), மருளும் மான், சூரியன் வரவை எதிர்பார்க்கும் தாமரை என்பன தலைவனுக்குத் தலைவியை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

ரீனா ரேர்ணர் புதிய புதிய அர்த்தங்கள் தோன்ற சொற்களை வீசுவதில் வல்லவர். இங்கிலிஸ் விற்பன்னருக்கே அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுப்பதில் நிகரற்றவர். இதோ: 'இந்த வீட்டில் நான் தனியே இருக்கின்றேன். மாலை நிகழ்ச்சிகளை FM வானொலி மெலிந்த குரலில் இயம்பிக்கொண்டிருக்கிறது. மௌனம் வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. தொலைபேசி கூட, அழைக்கும் ஒலியின்றி உறைந்து போய் இருக்கின்றது.'

ஆறு வாரங்களின் பின் வரப்போகும் ஒரு தேசியவிழா பற்றி எங்கோ ஒரு தெருவில் அறிவித்தல் ஒன்று இடைக்கிடை மழலைக் குரலில் இயம்புகிறது. வெறிச்சோடிக் கிடக்கும் அவ்வீட்டில் தட்டந்தனியனாய் தொலைபேசியில் கண்ணும் அந்நிறுவனத்தின் இசைப்பாடல் நிகழ்ச்சிக்குப் பாடச் சென்றுவிட்ட கணவன் மீது கருத்தும் வைத்துக் காத்திருக்கிறாள்.

அவனோ இப்படி ஒருத்தி இருக்கிறாள் என்பதையே மறந்து அந்நிறுவனத்தின் புகழை ஊர்ஊராக நாடுநாடாக சுற்றிச் சுற்றிப் பாடி வருகிறான். அவனுடைய உள்ளத்தில் அவளுடைய நினைவே அழிந்து விட்டதா?

மக்கள் எல்லோரும் அவனுடைய பாடல்களுக்கு அடிமையாகி விட்டதால் ஊர் உலகம் எல்லாம் அவன் பாடல்களே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதனால் ஏற்பட்ட புகழ் வெறியாலோ அல்லது இசைப்பாடல்களில் கொண்ட மோகத்தாலோ தனக்கு ஒரு மனைவி இருக்கிறாள் என்பதையே மறந்து விட்டான். அவனை றொக் அன்ட் றோல் நிறுவனத்துக்கு கடன் கொடுத்து விட்டாளா?

ஆம்! இசைப்பாடல் நிகழ்ச்சிக்கு 'தத்தம்' செய்து விட்டாள். சாதாரண இல்வாழ்க்கையை தியாகம் செய்து அந்நிறுவனத்துக்கு கையளித்து விட்டதனால் இப்போது அவள் ஒரு கைம்பெண்.

ரீனா ரேர்ணரின் கைம்பெண் (விதவை) என்பதன் பொருள் புதுமையும் புரட்சியும் வாய்ந்ததல்லவா? அவருக்கு எம் வாழ்த்து!

அப்படியானால் எம்மவரும் நம் கலாசாரம் எனக் கூறிக்கொண்டு அதற்குள் புதைந்து விடாமலும் அதை மீறுகிறோம் எனக் கூறி கலாசார சீரழிவுக்குள் அமிழ்ந்து விடாமலும் கால மாற்றங்களுக்கேற்ப மனோதர்மம் காத்து மகிழ்வோடு வாழ்வார்களாக!



- குறமகள்-

# ஆடி பிறந்தது

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே என்று
ஆண் பெண் குழந்தைகள் கூடிப்பாடி மகிழ
ஆடி பிறந்தது இன்று

ஆடி பிறந்தது இன்று ஆடி பிறந்தது
ஆடி அடங்கிய உறவுகளின் ஆத்மாக்களின்
ஆவிகளுக்காய் பண்டம் ஆக்கிப் படைத்திட
ஆடிபி றந்தது இன்று

ஆண்டு எண்பத்து மூன்று ஆடியில் அன்று
ஆடி முடித்த சிங்கள ஆட்சியாளர்களின்
ஆடிக் கலவரத்தால் மாண்ட ஆவிகளையும்
ஆழ்ந்து நினைத்திட ஆடி பிறந்தது இன்று

ஆடி பிறந்தது இன்று ஆடி பிறந்தது
ஆதி மனிதன் அன்று சொன்னது போல்
ஆடி விதை தேடிவிதைக்க வேளாளர்
ஆயத்தமாவதற்கு ஆடி பிறந்தது இன்று

ஆடி மாதம் வரும் அமாவாசை தினம் அன்று
அன்னம் தண்ணிகூட அருந்தாது விரதமிருந்து பிதாவின்
ஆத்மா சாந்தி வேண்டி பிதிர் தர்ப்பணம் செய்ய
ஆடி பிறந்தது இன்று ஆடி பிறந்தது

ஆவிகளுக்குப் படைத்திட அன்னை ஆக்கிவைத்த
ஆடிக் கொழுக்கொட்டை கூழும் குடித்து
ஆடிப் பாடிக் கூடிக் கொண்டாடிட
ஆடிபிறந்தது இன்று ஆடிபிறந்தது.

- கவிநாதம் பரந்தாமன் -



# EDUCATION

## Review Questions15 -14

➢ **BIOLOGY 11 &12**

(i) Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication. Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

(ii) Describe the functional and evolutionary importance of "introns ".

➢ **PHYSICS (Gr12)**

A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary. The ball is pulled back 20° from the vertical and then released. Calculate the speed of the ball just before impact and the tension in the rope just before impact.

(b) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force *F*max exerted by the ball on the wall.

➢ **POLYNOMIAL FUNCTION (Gr 12)**

Determine the equation of the polynomial,

$f(x) = ax^3 + bx^2 + cx + d$ which has the following properties

(a) Remainder -7 when divided by $(x-1)$

(b) Same remainder when divided by $(x-2)\&(x+2)$

(c) one of the factor $x$ and the graph passes through (-1,17)

(ii) Determine the solution set for the inequality $x^4 + 9 \leq 6x^2$

## Answer Key : 15-13

**PHYSICS (12)**

The distance between X and Y is 500m.
car A, $v = 20 m/s$, $d_1 = 171m$; $t_1 = 171/20$ s
when the speed is doubled ,

$v = 40 m/s$, $d_2 = 261 m$, $t_2 = 261/40$ s
car B, initial speed = v m/s;
acceleration = a $m/s^2$

When it crosses each other,
First instance, $d_1 = 500-171 = 329m$;
$t_1 = 171/20$ s;
Second instance, : $d_2 = 500-261 = 239m$;
$t_2 = 261/40$ s;

For the motion of car B ,

Use the kinematic equation,

$\Delta d = Vx\, \Delta t + ½\, a\, \Delta t^2$

$329 = Vx\,(171/20) + ½\, a\,(171/20)^2$ .........(i)

$239 = Vx\,(261/40) + ½\, a\,(261/40)^2$ .........(ii)

Solve for V, (initial speed of carB)

➢ **BIOLOGY 11**

Among the 4 types of chromosmal damages, translocation affect more than one chromosome.

## Answer Key : 15-12

**MATH GR 11**

Amal & George each take $x$ minutes

Filling apples per minute= $\frac{200}{x}$

Viveka,

Filling apples per minute = $\frac{200}{x+2}$

Three together filling 400 apples in 5 minutes,

$$\frac{5(200)}{x} + \frac{5(200)}{x} + \frac{5(200)}{x+2} = 400$$

$$2x^2 - 11x - 20 = 0$$

Solve for $x$ *using quadratic formula*; $x = 6.9$ minutes

Ans. key
15-14 - next issue
☎ 647 341 3975

KEEN TUTORING CENTRE

# வெளவால் வேட்டை

## சிறுகதை

அன்று விடியப்புறம் நாலு மணியிருக்கும் எங்கடை வீட்டுப் படலைக்குக் கிட்ட 'ஐயா வாருங்கோ என்னைக் கொண்டு போறாங்கள் பொலிசுக்காறர்' எண்டு ஆரோ பலமாகக் கத்தினதைக் கேட்டு, ஐயா திடுக்கிட்டு எழும்பிக் கையிலை டோர்ச்சு லயிட்டையும் எடுத்துக்கொண்டு படலைக்கு ஓடினார். நானும் பின்னாலை ஓடினன். எங்கடை ஊரிலை கூலி வேலை செய்யிற துரையனை கைரெண்டையும் பின்னாலை சால்வையாலை கட்டி வைத்துக்கொண்டு, இரண்டு பொலிசுக்காரர் நிண்டினை. ஐயாவைக் கண்ட உடனை 'பாருங்கோ ஐயா இவங்கள் என்னை பொலிசு ஸ்ரேசனுக்குக் கூட்டிக்கொண்டு போறாங்கள் என்னைக் காப்பாத்துங்கோ ', என்று அழாக் குறையாச் சொன்னான். உடனே ஒரு பொலிசுக்காறன் 'சத்தம் போடவாணாம். நிப்பாட்டு. இவங் கல்லன். இவனோடை வந்தவன் ஓடினது' எண்டான்.

அவங்கள் இரண்டு பேரும் சிங்களப் பொலிசுமார் என்றதை ஐயா விளங்கிக் கொண்டு 'மொக்கதவுணே றாலமி' எனச் சிங்களத்திலை கேட்டார்.

உடனே அவன் நடந்ததைச் சிங்களத்திலை சொன்னான். அதன் சுருக்கத்தை நான் ஐயாவிடம் பிறகு கேட்டுத்தெரிந்து கொண்டேன். பொலிசுக் காரர் வழக்கமான இரவு வேலை ரோந்திலை சயிக்கிலிலை வந்து எங்கடை வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளியிருக்கிற ஒழுங்கைக்குள்ளை டோர்ச்சு லையிட்டை அடிச்சுப் பாக்க, இரண்டு பேர் வேலிக்குப் பக்கத்திலை பதுங்கிகொண்டு இருந்திருக் கினை. லையிட்டை அடிச்ச உடனை 'டேய் பொலிசடா' எண்டு சொல்லிப்போட்டு ஒருதன் ஓடத் துவங்க, மற்றவனும் பின்னாலை ஓடியிருக்கிறான். முன்னாலை ஓடினவன் கையிலை துவக்கு இருந்ததைப் பொலிசுக்காரர் கண்டிட்டு, சயிக்கில்லை பின்னாலை கலைத்திருக்கிறாங்கள். முன்னாலை ஓடினவன் பக்கத்திலை இருந்த குச்சொழுங்கைக்கை ஓடி அருகிலை இருந்த கோயிலுக்கை மதிலா லை பாய்ந்து ஒளிச்சிட்டான். பின்னாலை ஓடினவன் நேராய் ஓடப் பொலிசுக்காரர் சயிக்கிலிலை வேகமாகப் போய் பிடிச்சுப் போட்டாங்கள். அவன்ரை கையிலை சவுக்காரம் இருந்ததை கண்ட பொலிசுக் காரர் அவனைப் பிடிச்சு ஓடினது ஆர் என்று தங்களுக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழிலை கேட்டிருக்கினை. பிடிபட்டவன் தான் துரையன்.

துரை சொல்லியிரிக்கிறார் எனக்கு அவனைத் தெரியாதெண்டு. பொலிசுக்கு இவங்கள் களவெடுக்கப் பதுங்கியிருக்க வேணும் என்ற ஐமிச்சம் வந்ததிட்டுது. வாடா பொலிசு ஸ்ரேசனுக்கு என்று கூட்டிக்கொண்டு போகும்பொழுது எங்டை வீட்டுக்குக் கிட்ட வந்தவுடனை துரையன் கத்தியிருக்கிறார். அவங்கள் சொன்னதைக் கேட்டவுடனை, 'உன்னோடை வந்தது ஆரெண்டு சொல்லன் அவங்களோடை நான் கதைச்சுப் பாப்பம்' என்று ஐயா துரையனைப் பாத்துக் கேட்டார்.

**- துறையூரான் -**

'ஐயா அது இப்ப சொல்ல ஏலாது. நாளைக்குச் சொல்லுறன்' என்றார். 'அவங்கள் இப்ப உன்னைக் கொண்டு போய் அடிக்கப் போறாங்களே நீ நடந்ததைச் சொல்லன்' என்றார் ஐயா.

'அப்பிடி என்றால் நீங்கள் எங்டை பிரக்கிராசி நடராசாவைக் கூட்டிக்கொண்டு காலமை பொலிசுக்கு வாங்கோ. இப்ப என்னை அடிக்க வேண்டாமெண்டு சொல்லுங்கோ' என்றார். அப்பிடியே ஐயா பொலிசோடை தயவாகக் கதைத்து விட்டார். அவங்கள் துரையைக் கூட்டிக் கொண்டு போனாங்கள்.

நானும் ஐயாவும் வீட்டுக்குள் வந்தோம். இதற்கிடயிலை அம்மா எழும்பி என்ன விசயமெண்டு கேட்டா. ஐயா நடந்ததைச் சொல்லிக் கொண்டிருந்தார். அதின்ரை சுருக்கம்தான் உங்களுக்கு நான் மேலை சொன்னது. அப்போது இன்னொருவர் 'அண்ணை படலையைத் துற' என்று கத்திக்கேட்டுது. ஐயா கதையை நிப்பாட்டிப் போட்டு எழும்பிப் படலைக்குப் போய் கூப்பிட்டது ஆரெண்டு பார்த்தார். சிற்றம்பலம் நின்றுகொண்டிருந்தார். ஐயாவுக்கு நல்லாய்த் தெரிந்த ஊர்க்காரர். படலையைத் திறந்து அவரை வீட்டுக்கை கூட்டிக் கொண்டு வந்தார் ஐயா. வந்தவுடனை ஐயா கேட்டார் 'என்ன செய்யிறியள் இந்த நேரத்திலை. அவன் துரையை எல்லோ பொலிசு கொண்டு போகுது' என்றார். அண்ணை எல்லாம் விரிவாச் சொல்லுறன் கேளுங்கோ எண்டு கதையைச் சொல்லத் தொடங்கினார்.

'நானும் துரையனும் வெளவால் சுடுவமெண்டு என்ரை துவக்கையும் கொண்டு ஒழுங்கைக்குப் போனோம். நாங்கள் இலுப்பை மரத்துக்குக் கீழே இருக்கிற வேலிக்கை பதுங்கி இருக்க ஆரோ டோர்ச்சை அடிச்சினம். ஆரென்று பாத்தன் இரண்டு பேர் சயிக்கிலிலை நிண்டாங்கள். உடனை எனக்கு விளங்கியிட்டுது பொலிசென்று உடனை துரையை ஓடச் சொல்லிப் போட்டு நானும் ஓடினன். நான் கோயிலுக்குப் போற குச்சொழுங்கைக்காலை ஓடி கோயில்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# ஒரு பயணத்தின் பல புத்தகம்

தலைநகர் தொட்டு
தெற்குமுனை நோக்கி
முள்ளந்தண்டாகவும்
அதில் தொடுத்துள்ள விலா எலும்பாகவும்
நெடுஞ்சாலைகள்
விரிவாக்கம் பெறுவதைக் கண்டேன்

நாடுதான் தம் உயிரென
ஆட்சிசெய்தோர்
வரிசையில்
மேலும் சிலர்
இணையக் கண்டேன்

பஞ்சம் தீர்க்கும் நன்செய் நிலம் கடந்து
செல்லச் செல்ல
சோற்றின் விலை
குறைவதை
உணர்ந்து கொண்டேன்

பட்டாம் பூச்சியாகத்
துள்ளியோடி விரையும்
பள்ளி
கல்லூரி
மாணவச் செல்வங்களின்
சீருடைக்கும்
கற்றலுக்கும்
பண்பாட்டுத் தொடர்புண்டு
என்பதையும்
புரிந்து கொண்டேன்

கிராமிய மண்ணில் முளைத்து
நகர் புகுந்து
பொருள்தேடும்
உழைப்போர் உலகம் பெருகுகின்றது

தினமும் வாசித்து
நிறைய யோசித்து



விண்ணுக்கும் அப்பால்
வெகுதூரம்
ஞானத்தை
எடுத்துச் செல்வதின்
அவசியத்தை
நன்கு
புரிந்துகொண்டேன்

முரணற்ற
'தனிமையின் இனிமை'
உணரும் வாய்ப்பை
விடுதி அறையில்
தற்காலிகமாக அனுபவித்தேன்

புலவர்கள் நடந்து திரிந்த
மண்ணில்
உலாவித் திரிந்தேன்

ஆன்மீகம் ஓங்கும் ஐந்திணை நிலத்தில்
ஐம்பது ரூபாய் உழைப்பவரின்
கண்ணிலும்
நான்
'அகதியில்லை'
எனும்
அஞ்சாநெஞ்சம்
நிமிர்ந்து நிற்கக் கண்டேன்

உபரித் தேட்டமும்
அறிவுச் சேமிப்பும்
மல்யுத்தம் புரியக்கண்டேன்

கரத்தை வண்டில் கூலிகள்
மதிய வெயிலில்
வேப்பமர நிழலில் மகிழ்வாக
இளைப்பாறக் கண்டேன்

ஓடும் பேரூந்தில்
உத்தமக் கவிகளின்
தத்துவப்பாடற் பழரசம்
காதில்
ஊற்றுவதை உணர்ந்தேன்

துண்டு துண்டாய்ப்
பிய்ந்து விழுந்த வானத்தைப்
பொறுக்கி எடுத்து
ஓடமாய்ப் பொருத்தி
தடாகத்தில் மிதக்கவிட்டு
இனிய இசைபாடி
துடுப்பால் வலிக்கும் இளஞ்சுடர்கள்
ஆலை மடிப்பில்
அசைந்து
பயணிப்பதையும் ரசித்தேன்.

- கந்தசாமி முத்துராஜா -

# வௌவால்...

மதிலிலை ஏறிக் கோயிலுக்கை போய் ஒளிச்சிட்டன். துரை பொலிசிட்டை அம்பிட்டுட்டான்.

'சரி பொலிசைக் கண்ட உடனை ஏன் நீங்கள் ஓடுனனியள். அவனிட்டை இப்படி வௌவால் சுட வந்தனாங்கள் எண்டு சொல்லியிருக்கலாமே' என்றார் ஐயா.

'அண்ணை நான் வச்சிருந்தது லைசென்சு இல்லாத துவக்கு. பொலிஸ் பிடித்தானெண்டால் என்ன நடக்குமெண்டு உனக்குத் தெரியுந்தானே. சரி இப்ப பொலிசுக்காரர் என்ன சொன்னவங்கள்?'

'நான் அவங்களிட்டை காலமை பிரக்கிராசியோடை வாறன். அவன் பாவம் அடிச்சுப் போடாதையுங்கோ எண்டு சொல்லி விட்டன். அவங்கள் என்ன செய்யிறாங்களோ தெரியாது. அது சரி கள்ளத் துவக்கோடை வௌவால் சுடப்போனனியள் ஏன் சவுக்காரங் கொண்டு போவான்?'

'இவன் துரை சொல்வழி கேளான். வௌவால் சுட்ட பிறகு கோயில் கிணற்றிலை குளிச்சிட்டுப் போவமெண்டு அவன் தான் கொண்டு வந்தவன்.'

'பொலிசுக்காரன் என்ன சொன்னவன் தெரியுமே. கள்ளர் களவெடுக்கப் போனால் சவுக்காரங் கொண்டு போய் வீட்டுக் கதவுப் பூட்டை சவுக்காரத்திலை பதிச்சுக் கள்ளத் திறப்புச் செய்யிறவங்களாம். அதுதான் துரையிட்டை சவுக்காரத்தை கண்ட உடனை நீங்கள் இரண்டு பேரும் துவக்கோடை களவெடுக்கப் போறியளெண்டு நினச்சிட்டாங்கள்.

'இந்த விசயம் ஆருக்கண்ணை தெரியும்' சரி இப்ப என்ன செய்யிறது?

'இப்ப ஒண்டும் செய்ய ஏலாது. நீ வீட்டை போய்ப் படு. காலமை பாப்பம்' எண்டு ஐயா சொல்லி அவனை அனுப்பி விட்டார்.

அம்மா சொன்னா 'பேசாமல் கிடவுங்கோ. அவங்கள் ஆரையெண்டாலும் பிடிச்சுக்கொண்டு பொலிசுக்குப் போகட்டும், எங்களுக்கு எவ்வளவு வேலை கிடக்குது செய்ய'.

'அவங்கள் பாவமப்பா. சிங்களமும் தெரியாது பொலிசுக்காரரோடை கதைக்க.'

'நீங்களே அவங்களை வௌவால் சுடப் போகச் சொன்னது. பேசாமல் எங்கடை அலுவலைப் பாருங்கோ' என்று சொல்லிப்போட்டு தேத்தண்ணி வைக்க அடுப்படியை நோக்கிப் போனா.

'நேரம் ஐந்து மணியாகிப் போச்சு தம்பி நீ கால் முகங் கழுவிப் படியடா' என்றார் அடுப்படியிக்கை இருந்து.

இந்த வௌவாலைப் பற்றி ஒரு விசயம் உங்களுக்குச் சொல்லவேணும். யாழ்ப்பாணத்திலை உள்ள சிலபேர் வௌவால் இறைச்சி தொய்வுக்கு (ஆஸ்துமாவுக்கு) நல்லது என்று சாப்பிடத்துவங்கி இப்ப எல்லாரும் சாப்பிடுகினை. கோழியிறச்சியைக் காட்டிலும் இது நல்ல ருசியாம். பொதுவாக வௌவால்கள் இலுப்பை மரங்கள் காய்ச்சுப் பழங்களோடை இருக்கும்போது நிறைய வரும். அந்த நேரம் எங்கடை ஆட்கள் இப்படி வௌவால்களை வேட்டை ஆடுகிறது வழக்கம். அன்றைக்கும் அதுதான் நடந்தது . ஆனால் அது விபரீதமாக முடிந்தது.

காலைமை ஏழு மணியளவிலை துரை வீட்டை வந்து 'ஐயா என்னைப் பொலிசு விட்டிட்டாங்கள். இன்ஸ்பெக்டர் எங்கடை தமிழ் ஆள் பின்னை அவரிட்டை விசயத்தை ஒழிக்காமல் சொன்னன். அவர் பேசிப் போட்டு அவன் மடையனைப் போய் லைசென்சை எடுக்கச் சொல்லு எண்டார். என்னை இப்படி வேலைகள் செய்யாதை எண்டு பேசிப்போட்டு அனுப்பி விட்டார். நல்ல மனிசன். நங்கள் எல்லாரும் துரை போன பிறகு விழுந்து விழுந்து சிரிச்சம்.

( பிற்குறிப்பு --இச்சிறுகதை யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் எழுதப்பட்டுள்ளது)


## கறுப்பு யூலை மாபெரும் ஒன்றுகூடல்

இடம்: Albert Campbell Square (Scarborough Civic Center)

காலம்: யூலை 24, 2015 வெள்ளிக்கிழமை நேரம்: மாலை: 6:00 மணி

மேலதிக தொடர்புகளுக்கு: கனடியத் தமிழர் தேசிய அவை
தொலைபேசி: 416-830-7703 மின்னஞ்சல்: info@ncctcanada.ca
முகநூல்: facebook.com/ncctonline

நகைச்சுவைத் தொடர் 314

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஒன்று, இரண்டு, மூன்று என பனாம் கேம்ஸ் நாடுகளை செக்கண்ட் புளோர் செல்லம்மா எண்ணிக்கொண்டிருக்க சிரித்தபடி ஆட்டிலறி அன்னம்மா சொன்னா 40க்கும் மேற்பட்ட நாடுகள், 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், எத்தனை இடங்களில் நடக்குது என்று புள்ளி விபரத்துடன் சொல்லிக் கொண்டிருந்தா.




இதேவேளை ஐபொட் அகிலாண்டேஸ்வரி இலங்கை பொதுத்தேர்தல் சின்னங்களை எண்ணிக் கொண்டிருந்தா. எத்தனை கட்சிகள் எத்தனை சின்னங்கள்




யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே. வேட்பாளர்களின் எண்ணங்கள் என்ன, அவரவர் சின்னங்கள் என்ன. அடேயப்பா! கை, வெற்றிலை, வாத்து, தாமரை, மணி, வீடு, யானை.

இதற்கிடையில் கண்டநிண்ட இடங்களில் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட்டக்கூடாதென தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.




தேர்தல் பிரசார கூட்டங்களில் புதைந்து கிடந்த தோண்டப்படாத பல உண்மைகள் பச்சை பச்சையாக பேசப்படுகின்றன.

எந்த எம்.பி. கைது செய்த தமிழர்களை சுறாவுக்கு இரையாகப் போட்டார், எங்கெங்கே மறைத்து வைக்கப்பட்டட முகாம்கள் உண்டு. சர்வதேச ரீதியில் வழங்கப்பட்ட நிதிகள் எங்கே? கையாடப்பட்ட நிதிகள், கைது செய்யப்பட்டவர்கள், சட்டத்திற்கு பயந்து தலை மறைவானவர்கள் எத்தனை பேர் என எல்லாம் வெளிவரும்.



அமெரிக்காவுடன் நேரடியாகவே மோதப்போவதாக சீனா அறிக்கை விடத் தொடங்கிவிட்டது. இதேவேளையில் தொடர்ந்து கடும் மழையால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயரத் தொடங்கி விட்டனர். அதுமட்டுமல்லாமல் பெருத்த மண்சரிவு ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டிறது.




அரசுகளின் மோதல் ஒருபக்கம், இயற்கை அழிவுகள் ஒருபக்கம்

ரூபி செல்போனில் இப்போ சரியான பிஸி. பிராங்பேட் பேரம்பலம் (ரூபியின் டடி) பென்சன் கிடைத்த நாளிலிருந்து இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி சுற்றுலா முடிந்தபாடில்லை மாறி மாறி ரூபிக்கு எடுப்பதும் அல்லது ரூபி எடுப்பதுமாகத்தான் நாட்கள் போகின்றன.




செக்கண்டபுளோர் செல்லம்மா மட்டும் தான் ரூபிக்கு அட்வைஸ் பண்ண முடியும். ராசம்மாவோ, உலகரோ தவிர்த்துக்கொள்வார்கள்.

செக்கண்ட்புளோர் செல்லம்மா உரிமையோடு சற்று பெலத்து ரூபிக்கு சொன்னா…ரூபி உந்த செல்போன் பாவிக்கிறதை குறை. நித்திரைக்கு போகேக்கை ரெலிபோனை தூரத்திலை வை. கடல் அலை கரையில் முடிகிறது, ஆபத்தில்லை. செல்போன் அலை காதில் எத்தனையோ பாதிப்புக்களை கொடுக்கிறது.



அண்டைக்கும் எங்கடை சீனியோர்ஸ் மீற்றிங்கிலை செல்போனாலையும் கான்சர் வருமாம், மூளையைப்பாதிக்குமாம் என சொல்லி முடிக்க… உலகரும் ராசம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவைப் பார்த்து சிரித்தனர். (தாங்கள் சொல்லவேண்டியதை செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னதற்காகவா?)



உலகண்ணை என்ன புதுச்சட்டம் வந்தாலும் அதனை எப்படி மீறுவது எப்டியென பலர் திட்டம் போடுவார்கள். பாஸ்போட், பி.ஆர் காட் லைசென்ஸ் பண நோட்டுக்கள் எது புதிதாக வந்தாலும் அதனை போலியாக செய்வதற்கு ஒரு குழு தயாராக இருக்கும். ஓ.யேஸ் என்று தொடங்கினா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. யு நோ, 3 பேர் போற வாகனத்தில் போற ரோட்டிலை ஒரு ஆள் 2 பொம்மையளை வைச்சு ஓடியிருக்கிறார் என்றா.

திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டேயிருக்குது. அதைச்சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது.



இசை மழை ஒன்று ஓய்ந்தது.
ஆண்டவனே உன் பாதங்களை என் கண்ணீரினால் நீராட்டினேன்.
சொல்லத்தான் நினைக்கிறேன். எண்ணத்தால் துடிக்கிறேன்.
- எம். எஸ். விஸ்வநாதன்

யூலை 16---31



16. இன்று காற்றினிலே வரும் கீதம் இசைத்திலகம் டி.கே.பட்டம்மாள் நினைவுதினம். (1919 - 2009)

17. ஆடிப்பிறப்பு (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே.. - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)



17. கதிர்காமம் கொடியேற்றம்.

18. றம்ழான் பண்டிகை

19. சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் (1947)



20 அன்னை சாரதா தேவி நினைவு தினம். (சுவாமி ராமகிருஸ்னரின் மனைவி) (பிற-1853- மறைவு 1920) 'உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே உன் குறைகளையே பார்.'



21. ஆடிச்செவ்வாய்.

21. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு தினம். (பிற-1927----மறைவு 2001)

25. வரசித்தி விநாயகர் தேர்த்திருவிழா.

கறுப்பு யூலை (1983) இனக்கலவரம்.




# ஆனை முகனுக்கும்…

27ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவாரப் பாடல் பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினான்கில் தலையாய இடத்தை வகிப்பது மதுரை மீனாட்சியம்மையின் ஆலயம். சம்பந்தரும் அப்பரும் பாடிய இத்தலத்தில் மீனாட்சியம்மையை தரிசிக்கச் செல்கையில் நான்காவது படைவீட்டின் நாயகன் 'சித்தி விநாயர்' என்ற பெயரில் பக்தர்களுக்கு அருளாட்சி புரிகின்றார். அம்மன் சந்நிதிக்குள் முன்னர் இவரின் தரிசனத்தைப் பெறலாம். நாம் விரும்பு கின்றவாறு காரியங்களை நிறைவேற்றித் தரும் இந்த இஷ்டசித்தி விநாயகரின் கீர்த்தி மூர்த்தி சிறிதானாலும் பெரியது. மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனுக்காக குதிரை வாங்கப் புறப்படுகையில் இந்த சித்திவிநாயகரையே தரிசித்துச் சென்றதாக திருவிளையாடற் புராணம் தெரிவிக்கின்றது.

### ஐந்தாவது படைவீடு

காசி மற்றும் பிள்ளையார் பட்டி பிள்ளையாரே ஒரு ஹீரோ தான். பிள்ளையார்பட்டி பிள்ளையார் என்றால் ஹீரோக்களுக்கெல்லாம் ஹீரோ தானே. விநாயகப் பெருமானுக்கென்று அமைந்துள்ள பிரமாண்டமான ஆலயங்களில் பிள்ளையார் பட்டியும் ஒன்று. காசிக்கு செல்கின்றவர்களுக்கு தலவிநாயகராக வீற்றிருந்து நலம் வழங்குகின்றார். துண்டி ராசகணபதி. அனைத்துப் பேறுகளும் நம்மை வந்தடைந்தாலும் ஞானம் இல்லையேல் அந்தப் பேறுகளால் ஒரு பலனும் இல்லை. அந்த ஞானத்தை வழங்குபவராக காசியில் துண்டிராஜ கணபதி தீட்சா கணபதியாக இருந்து அருள் பாலிக்கின்றார். இவர் சந்நிதியில் குருமுகமாக உபதேசம் பெற்றால் பலன் சித்திக்கும் என்கிறார்கள். காசிக்கு செல்லமுடியாதவர்களுக்கு அதே பலனை தருகின்றவராக பிள்ளையார் பட்டியில் உள்ள கற்பக விநாயகர் விளங்குகின்றார். இவர் சிவலிங்கத்தை கையில் தாங்கி அருள்புரிகின்றார். இவரை வணங்கினால் தீட்சை ஞானமும் கிட்டும்.

### ஆறாம்படைவீடு திருநாரையூர்

சோழநாட்டு வடகரைத் தலமான திருநாரையூரில் அருள் பாலிக்கின்றார் பொல்லாப் பிள்ளையார். சிற்பியின் உளியால் பொள்ளப்படாமல் சுயம்புவாகத் தோன்றியமையால் இந்த விநாயகருக்கு இத்திருநாமம். அப்பரும் சம்பந்தரும்



பாடிய இத்தலத்தில் தான் தேவாரத் திருமுறைகள் நமக்கு கிடைக்க காரணமாயிருந்த நம்பியாண்டார் நம்பி அவதரித்தார்.


அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
CURRY CHILLI POWDER
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru
BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru Niru
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# எப்பொழுதும் அழகாக இருப்பது எப்படி?

**கடந்த இதழ் தொடர்ச்சி....**

அழகாக இருக்கவேண்டும் என நினைப்பவர்கள் ஆண்களைவிடப் பெண்களே அதிகம். எப்பொழுதுமே அழகாக இருக்கவேண்டும் என அழகுக்கு அழகு செய்பவர்கள் பலவிதம். அழகைத் தொடர்ந்து பேணமுடியாமல் இருப்பவர்களும் பலர். உடல் அழகை, வசீகரத்தை, பார்ப்பவர்கள் வியப்புறும் வண்ணம் தங்களை ஆக்கிக்கொள்வது ஒரு கலை. அந்தக் கலைக்காக காலமெல்லாம் தங்கள் நேரத்தைச் செலவு செய்தவர்கள் பற்றிய வரலாறுகள் பல உண்டு.



- த. சிவபாலு -

'உடலழகைப் பார்த்து' 'பெண்ணழகைப் பார்த்து' 'அவள் அழகைப் பார்த்து' பின்னழகைப்பார்த்து 'முன்னழகைப்பார்த்து' கண்ணழகைப்பார்த்து 'நடையழைகைப் பார்த்து' இது 'நடையா இது நடையா ஒரு நாடகமெல்லோ நடக்குது' எனப் பலவாறு பாடப்பட்டமைக்கு அழகினை பார்க்கும் கோணங்களே காரணம். இரசிப்பதற்குத் தான் கண்கள் ஆயிரம் உண்டே. 'காணக் கண் கோடி வேண்டும்' என்பதில் உள்ள அழகின் அடக்கம் எத்தன்மையது. அழகு என்றால் கவர்ச்சி என்பது அதன் உட்பொருளாக அமைகின்றது. கண்டதும் மீண்டும் பார்க்கத் தூண்டுவது கவர்ச்சி. அந்தக் கவர்ச்சிக்கு உடல் உறுப்புக்கள் காரணமாக அமைந்தாலும் முழுமையே அதற்குக் காரணம் எனலாம்.

உடலழகைப் பேணுவதற்குப் பல்வேறு உடற்பயிற்சிகள், அழகுசாதனப் பொருட்கள் போன்றனவற்றை விடப் பெண்களாக இருந்தாலும் சரி ஆண்களாக இருந்தாலும் சரி உணவுக் கட்டுப்பாடு மிக முக்கியமானதாக அமைகின்றது. வயது வந்தாலும் தோலில் சுருக்கம் ஏற்படாத அழவிற்கு இருக்கின்றாரே என்று வியந்து பேசும் அழவிற்கு அந்த அழகின் இரகசியம் என்ன என்று பலர் யோசிப்பது உண்மை. அதற்கு உணவு மிக முக்கியமானது. முடி கொட்டுதல், சருமம் சுருங்குதல் அல்லது வழுவழுப்புத்தன்மை நீங்கி பொருக்கு வருதல் போன்றவற்றிற்கு உணவுப் பழக்கமே காரணம் எனப்படுகின்றது. உணவில் சேர்த்துக்கொள்ளப் படும் உயிர்ச்சத்து, கனிமச்சத்து, புரதச்சத்து என்பன போதியளவில் செறிந்திருத்தல் வேண்டும் என்பது முக்கியமானது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி அழகைப் பேணப் பயன்படுத்தப்படும் பொருட்கள் பெருந்தொகையாக வெளி வந்துள்ளன, வெளிவந்து கொண்டே இருக்கின்றன. உடல் பருமனைக் குறைப்பதற்காக பெருந்தொகையான மாத்திரைகள், மருந்துக்கலவைகள் உள்ளன. இவற்றுள் Acai Berry Detox மற்றும் Life Cleanse என்பவை உடல் நிறையைக் குறைத்து உடலுக்கு அழகு தருவன என ஸ்ரிபெனி வின்சோர் (Stephanie Windsor) 2009இல் மேற்கொண்ட ஆய்வின்படி அகாய் பெரி டெரொக்ஸ், லைப் கிளீன்ஸ் என்னும் இரு மாத்திரைகளும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் அழகையும் கொடுப்பதாகக் தான்மேற்காண்ட 175 வெளியீட்டுப் பொருட்களை ஆய்ந்ததிலிருந்து கண்டறிந்துள்ளார். (Canada News) இந்த மாத்திரைகளில் ஒமேக்கா எண்ணை, என் அசிற்றில் ரைறோசின் ஆகியன உடலில் உள்ள மதுசாரத்தை வெளியேற்றுகின்றது. அதிகளவு நாற்சத்து,..19 வகையான அமினோ அமிலம், பார்பெரி வேர் சமிபாட்டை அதிகரிப்பதோடு உடலுக்குத் தீங்கு விளைக்கும் கிருமிகளையும் அழிக்க வல்லது, செறோமியம் குருதியில் உள்ள சர்க்கரைத் தன்மையை மிதப்படுத்துகின்றது, உடலில் உள்ள நரம்புத் தொகுதியை ஒழுங்காக இயங்கவைப்பதால் உடலின் எல்லாப்பாகங்களுக்கும் குருதிச் சுற்றோட்டம் இடம்பெறுகின்றது. இவற்றால் தோலை மென்மையாகவும், வழுவழுப்பாகவும் வைத்திருப்பதால் அழகு எப்பொழுதுமே நிலைத்திருக்கின்றது என்கின்றார்கள். இந்த இரகசியத்தை பெரும்பாலான பெண்கள் விரும்பி உபயோகிக்கின்றார்கள். இதனால் தங்கள் இளமையை நீடிக்க முடியும் என எண்ணுவதே இதற்குக் காரணமாகும். அழகுக்கு அழகு செய்வதில் சருமத்தை கடினமாக்குவது மது, போதைப் பொருட்கள், புகைத்தல் என்பன என வைத்திய ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. எனவே அழகை நாடும் நங்கையர் என்ன காரணம் கொண்டும் மது, போதைப் பொருட்கள், புகைத்தல் என்பனவற்றைத் திரும்பியும் பார்க்கக்கூடாது. புகைப்பவர்களுக்கு அண்மையிலும் செல்லுதல் கூடாது.

குழந்தைப் பருவத்து அழகைத் தொடர்ந்து இடம்பெற வைப்பதற்கு பெரும்பாலானவர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களது பழக்கவழக்கமே அழகிற்கு அழகு செய்கின்றது. மனவெழுச்சி, பழக்க வழக்கங்கள், சூழல், செய்யும் தொழில் என்பன அழகு தொடர்ந்து பேணப்பட அடிப்படையாக உள்ளன. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்களே குழந்தைப்பருவத்து அழகுக்கும் வளர்ந்து பெரியவராக அனதந்பின்னரும் உள்ள அழகுக்கும் அழகில் வேறுபாடு உண்டா இல்லையா என்பதனை முன்னர் கூறிய காரணிகள் எடுத்துக் காட்டுகின்றதோடு மட்டுமன்றி யெசிக்கா பேக்கரின் குழந்தைப் பருவமும் அவரது இன்றைய தோற்றத்தையும் பார்த்தால் வியப்பாக இல்லையா? அடிக்கடி கோபம் கொள்பவர்களின் அழகு கெட்டுவிடும். 'சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்பது கண்ணதாசனின் அருமையான கருத்து. சிரிப்பே அழகின் இரகசியம் என்பதை உணர்ந்தால் போதும்.

ஆள்பதி ஆடைபாதி என்பார்கள். அழகு என்பது எங்கே இருக்கின்றது? நடையழகுடு, உடையழகு, உடலழகு, கண்ணழகு, காலழகு, கூந்தல் அழகு என்று ஒரு பெண்ணின் அழகைப் பற்றிப் பல்வேறு வகையாக வர்ணிக்கின்றார்கள். ஆள்பாதி ஆடைபாதி என்பதனாலே என்னவோ இன்று ஆடம்பரமான உடைகள் குறைப்புச் செய்யப்பட்டு அரைவாசி உடலைத்தானும் மறைக்காத மர்மமாக முழுக் கவர்ச்சி காட்டி நிற்கின்றார்கள் நவ நாகரிகப் பெண்கள்.



சங்ககாலத்தில் ஐவகை நிலங்களில் ஒன்றான நெய்தல் உடைக்குப் பேர் போனது. நெய்த உடைகளைப் பெண்கள் உடுத்ததாலோ என்னவோ நெய்தல் என்னும் பெயரே அந்தமண்ணுக்காயிற்று.

தொடரும்....

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

கனடா வாழ் துன்னாலை - கரவை மக்கள் மன்றம் நடத்தும்
18ஆவது ஆண்டு கோடை கால ஒன்று கூடல் 2015
இடம்: Morningside Park Area 5 (Ellesmere & Morningside)
காலம்: July 18, 2015 நேரம்: காலை 9:30 - மாலை 6:30 வரை நடைபெற உள்ளது.
தொடர்புகளுக்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477 வெ. சின்னராசா 416-724-4032
வே. சத்தியராஜா 416-291-5853







# பாகுபலி திரைவிமர்சனம்




யூலை 10ஆம் திகதி உலகம் முழுவதும் தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியான படம் பாகுபலி. பழைய காலத்து அரசனின் கதை இதுவாகும். 'பாகுபலி' என்றால் பலம் பொருந்திய கைகள் உடையவன் என்ற கருத்து. கதாநாயகன் குழந்தையாக இருந்தபோது அவரை ஒரு அரசபரம்பரை பெண் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறாள். குழந்தையை கையில் வைத்துக் கொண்டே அவர்களை துரத்தி வந்த போர் வீரர்களை கொல்கிறாள். ஆனால் அவர்களிடம் தப்புகிறவள் தண்ணீரில் தவறி வீழ்கின்றாள்.



குழந்தை காப்பாற்றப்பட்டு, வளர்ந்து படத்தின் கதாநாயகன் ஆகிறான். அவன் வாழும் இடத்தருகே இருக்கும் ஒரு மிகப்பெரிய மலையில் ஏறி மறுபக்கத்தில் என்ன இருக்கிறது என அறிய விரும்பி, பெரிய நீர்வீழ்ச்சியுடன் கூடிய அந்த மலையில் ஏற பலமுறை முயற்சிக்கிறான். மலையைத் தாண்டி வாழ்பவர்கள்தான் தன் வளர்ப்பு மகனை கொல்ல வந்தனர் என அறிந்த வளர்ப்புத் தாய்க்கு கதாநாயகன் மலையில் ஏற முயல்வது பிடிக்கவில்லை.

கதாநாயகன் மலையில் எப்படி ஏறுவான்? மலையைத் தாண்டி என்ன இருக்கிறது? கதாநாயகனின் உண்மைப் பெற்றோர்கள் யார்? இதெல்லாம் படத்தை பார்த்தறியுங்கள். இனி பாகுபலியைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

இந்திய சினிமா வரலாற்றின் அதிகூடிய பணம் ($40 மில்லியன் அமெரிக்கன் டொலர்) செலவழித்து தயாரித்த படம் இது. இதற்கு ஏற்ப பாகுபலியும் அமைகிறது. இப்படத்தின் கதை புதிதாக இல்லாவிட்டாலும், இப்படத்தின் தரம், பிரம்மாண்டமான காட்சி அமைப்பு போன்ற விடயங்களில் பணம் செலவழித்தது தெரிகிறது. எனவே பார்க்கக்கூடியவர்கள் Theater இல் பார்த்தால் இக்காட்சிகளை முழுதிறமையுடன் காணலாம், இரசிக்கலாம்.

படத்தின் பிரம்மாண்டத்திற்கு ஏற்ப, பாகுபலியின் திரைப்பட Poster ஒன்றும் Guiness book of world record ஐ மிகப்பெரிய Posterக்கு பெற்றுள்ளது.

தெலுங்கு நடிகர்கள் கதாநாயகனுக்கும், வில்லனுக்கும் வருகிறார்கள். ஆனால் இப்படத்தில் மூன்று கதாநாயகிகள் கதையின் ஒவ்வொரு பரம்பரைக்கு ஒருவராக வருகின்றனர். இம்மூவராக ரம்யா கிருஷ்ணன், அனுஷ்கா மற்றும் தமண்ணா நடிக்கின்றனர். மூவரும் மிக திறமான கதாபாத்திரங்களாக காட்சியளிக்கின்றனர்.

அழகிலும், வீரத்திலும் சிறந்த போராளி தான் தமண்ணாவின் கதாபாத்திரம். ரம்யாவின் கதாபாத்திரம் படையப்பா நீலாம்பரிக்கு எதிராக நிற்கக் கூடிய இராஜமாதா. அனுஷ்காவின் கதாபாத்திரத்தை பற்றி எங்களுக்கு தெரியாது. ஆனால் படத்தைப் பார்த்தால் இவரும் மிக வீரமுடைய ராணி என தெரிகிறது. இக்கதாபாத்திரத்தை பற்றி இரண்டாம் பாகம் படத்தில் விரிவாக கூறப்படும் என தெரிகிறது.

இவ் அரச கதையை பிரமாண்டமான முறையில் படமாக்கிய விதமும் கதை கூறப்படுகிற விதமும் புதியது. பாகுபலி இந்தியாவின் அதிகூடிய செலவுடன் எடுக்கப்பட்ட ஒரு தரமான, பிரமாண்டமான படம் என கனேடிய CBC செய்தி நிறுவனம் உட்பட உலகம் எங்கும் புகழப்பட்டிருக்கிறது.

'பாகுபலி: The beginning' என்ற இப்படத்தின் இரண்டாம் பாகம் ஆன 'பாகுபலி: The conclusion' 2016இல் வர இருக்கின்றது.

உலகம் முழுக்க தமிழ் சினிமாவை திரும்பிப் பார்க்க வைத்த படம் பாகுபலி என பல்வேறு இணையத்தளங்கள் கூறுகின்றன. கதை எங்களுக்கு புதிதாக இல்லாவிட்டாலும் உலகிற்கு புதியது. பாகுபலி படத்தால் உலகம் முழுக்க 'இந்திய சினிமா எது?' எனக் கேட்டால் இனி சிலர் ஹிந்திப் படங்கள் என்று கூறுவதுடன் தமிழ் படங்களையும் உதாரணமாகக் கூறுவார்கள்.



**ஞா. ஆரணி**
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN
தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும்
வேர்களைத் தேடி...
நாடகம்
பொன்னையா விவேகானந்தன்
ஆக்கத்தில் பல முன்னணிக் கலைஞர்கள் பங்கேற்கும் அரங்க ஆற்றுகை
இந்நாடகத்தின் அங்கங்களாக,
ரொறன்ரோ சீன பண்பாட்டு மையம் வழங்கும் சீன பண்பாட்டு நடனமும் மரபுக்கலை வேந்தன் திரு பொன். அருந்தவநாதன் ஆக்கத்தில் உருவான காத்தவராயன் சிந்து நடைக்கூத்தும் இடம்பெறுகின்றன.
ஜூலை
25
சனி
மாலை 6:30
அனுமதி இலவசம்
Armenian Youth Centre
50 Hallcrown Place,
Toronto, ON, M2J 1P6
வேண்டுகோளுக்கு ஏற்ப முதியோர் இல்லங்களிலிருந்து போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்படும்.
This project is funded in part by the Government of Canada.
Canada

# A NEW PROJECT BY TRIDEL

SQ²
SPADINA ▸ QUEEN

TRIDEL
BUILT FOR LIFE

**Only few Units Available**



**For Further Information Please Call**

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

"Dream is Yours Obligation is ours"

## Contact:416.321.6969

*Independently owned & operated




















**Free Real Estate Class - Call: 416.321.6969**












விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**